2018

ஆண்டறிக்கை



இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

09-09-2019

மாண்புமிகு மலிக் சமரவிக்ரம
அபிவிருத்தி உபாய முறைகள மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு,
30 ஆம் மாடி, மேற்குக் கோபுரம்,
உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01.

மதிப்பிற்குரிய ஐயா

<u>கணக்கியல் கூற்று மற்றும் ஆண்டறிக்கை– 2018</u>

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (2) இற்கு அமைவாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை பின்வரும் ஆவணங்களுடன் இணைத்து, இயக்குனர்கள் சபை சார்பாக சமர்பிப்பதில் நான் மகிழ்வடைகிறேன்.

- தலைவர் அறிக்கை
- கணக்கியல் கூற்று
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

தங்கள் உண்மையுள்ள,

இந்திரா மல்வத்த
தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் - 2018

தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி	-	திருமதி. இந்திரா மல்வத்த
பணிப்பாளர் நாயகம்	-	திருமதி. ஜே. சிறிவர்தன
மேலதிக பணிப்பாளர் நாயகம் - அபிவிருத்தி	-	திரு. டீ. ஜெயவர்தன
மேலதிக பணிப்பாளர் நாயகம் - நிதி மற்றும் நிர்வாகம்	-	திருமதி. பீ.கே. சுமித்திராஆரச்சி (18.02.2018 வரைக்கும்)
நிதிப் பிரிவு	-	செல்வி ஜீ.ஏம். ஹேரத் (பணிப்பாளர்)
மனிதவள அபிவிருத்திப் பிரிவு	-	திரு. கே.கே.ஆர் கன்னங்கரா (பணிப்பாளர்)
வியாபார வசதிப்படுத்தல் மற்றும் வியாபார தகவல் பிரிவு	-	திரு. எஸ்.ஆர்.பீ. இந்திரகீர்த்தி (பணிப்பாளர்)
தகவல் தொழிநுட்பப் பிரிவு	-	திருமதி ஐ.சீ. அழகப்பெரும (பணிப்பாளர்)
ஏற்றுமதி விவசாயப் பிரிவு	-	திருமதி. பீ.வீ.ஏ.எம். பத்தேகமகே (பணிப்பாளர்)
பிராந்திய அபிவிருத்திப் பிரிவு	-	திருமதி. அனோமா கரலியத்த (பணிப்பாளர்)
மூலோபாய திட்டமிடல் மற்றும் கொள்கைப் பிரிவு	-	திருமதி யு.கே.டீ. வெகப்பிட்டிய (பணிப்பாளர்)
கைத்தொழில் உற்பத்திகள் பிரிவு	-	செல்வி. சீ. திசாநாயக்க (பணிப்பாளர்)
ஏற்றுமதி சேவைகள் பிரிவு	-	திரு. எம்.கே.எஸ். கே. மெல்டெனி(பணிப்பாளர்)
சந்தைப்படுத்தல் அபிவிருத்தி பிரிவு	-	திருமதி. கே.ஏ.வீ. பிரேமதிலக்க (பணிப்பாளர்)
உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு	-	திருமதி. நில்மினி றணசிங்க(உள்ளகக் கணக்காய்வாளர்)
சட்டப் பிரிவு	-	திருமதி. டீ.ரீ. விஜயரத்ன (சட்ட உத்தியோகத்தர்)
கணக்காய்வாளர்	-	கணக்காய்வாளர் நாயகம்
வங்கியாளர்கள்	-	இலங்கை வங்கி
	-	சம்பத் வங்கி
	-	தேசிய அபிவிருத்தி வங்கி

<u>பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்</u>
இல.42, நவம் மாவத்தை,
கொழும்பு 02.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
இயக்குனர்கள் சபை– 2018

01.	திருமதி. இந்திரா மல்வத்த	- தலைவர்
02.	கலாநிதி யுசுப் மரிக்கார்	- பணிப்பாளர் (ஜனவரி - அக்டோபர் 2018)
03.	திரு. பந்துல எகொடகே	- பணிப்பாளர் ((ஜனவரி - அக்டோபர் 2018)
04.	திரு. சனத் டீ சில்வா	- பணிப்பாளர் ((ஜனவரி - அக்டோபர் 2018)
05.	திரு. எம்.ஜே.எவ். காசிம்	- பணிப்பாளர்
06.	திரு. றொஹான் அபயகோன்	- பணிப்பாளர் ((ஜனவரி - அக்டோபர் 2018)
07.	திரு. சினன் சலாஹுடீன்	- பணிப்பாளர் ((ஜனவரி - அக்டோபர் 2018)
08.	திரு. பிரபாஸ் சுபஸிங்ஹ	- பணிப்பாளர (டிசம்பர் 2018 இல் இருந்து)
09.	திரு. ஜீவன் ஞானம்	- பணிப்பாளர (டிசம்பர் 2018 இல் இருந்து)
10.	திருமதி. டி.எஸ். விக்ரமசிங்ஹ	- பணிப்பாளர (டிசம்பர் 2018 இல் இருந்து)
11.	திரு. எல்.பீ. ஜயம்பதி	- செயலாளர் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு
12.	திரு. பண்டுள விக்ரமஆரச்சி	- செயலாளர் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு (அக்டோபர 2018 வரைக்கும)
13.	திருமதி. எஸ் சேனாரத்ன	- மேலதிக செயலாளர் (கொள்கை திட்டமிடல்) கைத்தொழில் மற்றும் வணிக் அமைச்சு (அக்டோபர 2018 வரைக்கும)
14.	திரு. டீ.வீ. பண்டுளசேன	- செயலாளர் விவசாய இராஜாங்க அமைச்சு
15.	திரு. டபல்யு.ஏ.டி.எஸ். குணசிங்ஹ	- மேலதிக செயலாளர் அபீருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு
16.	திரு. எஸ். சேனாநாயக்க	- மேலதிக செயலாளர் (திட்டமிடலும் அபிவிருத்தியும்) கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு (அக்டோபர 2018 வரைக்கும)
17.	திரு. யு.ஜீ. ரத்னஸிரி	- மேலதிக செயலாளர் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு (அக்டோபர 2018 வரைக்கும)
18.	திரு. டபல்யு.ஏ.டி.டி. விக்ரமசிங்ஹ	- மேலதிக செயலாளர் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

19.	திரு. ஆர். பி. ஆரியஸிங்ஹ	- சேயலாளர வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
20.	திரு. எஸ்.எந்.பீ.கே.எஸ். சேனாரத்ன	- மேலதிக செயலாளர் (நிர்வாகி மற்றும் மனித வளங்கள்) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு
21.	திரு.பீ.எச்.ஏ.எஸ். விஜேயரத்ன	- மேலதிக பணிப்பாளர் நாயகம் பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் நிதி அமைச்சு
22.	திரு. துமிந்த ஆரியஸிங்ஹ	- பணிப்பாளர் நாயகம் (முன்னாள்) இலங்கை முதலீட்டுச் சபை (அக்டோபர 2018 வரைக்கும)

பொருளடக்கம்

		பக்கம்
1.	தலைவரின் ஆசிச் செய்தி	64
2.	அறிமுகம்	65
3.	2018 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி செயல்திறன்	66-92
4.	நிதி நிலைக் கூற்று	93
5.	விரிவான வருமானக் கூற்று	94
6.	சமநிலை மாற்றக் கூற்று	95
7.	காசுப் பாய்ச்சல்க் கூற்று	96
8.	கணக்கியல் குறிப்புக்கள்	97-106
9.	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	107-117

தலைவரின் ஆசிச் செய்தி

பல்வேறு கோணங்களிலிருந்து பார்க்கும்போது, 2018 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்றுமதி கைத்தொழிலில் வெற்றிகரமான ஒரு வருடமாகும். நாட்டின் ஏற்றுமதித் துறையை கட்டியெழுப்புவதற்காக தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்தை வகுத்ததன் மூலம் உலகலாவிய சந்தைகளுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பொன்றை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு பாரிய அளவில் வசதிகள் வழங்கப்பட்டன. அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இணைந்து, தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்தை வெற்றிகரமாக தயாரித்து முன்னெடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் அதேவேளையில, ஏற்றுமதி செயல்முறையை துரிதப்படுத்துவதற்கான பல்வேறு முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையி ஆரம்பத்திலிருந்தே நாட்டின் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி, ஏற்றுமதி பன்முகப்படுத்தல், புத்தாக்கம் என்பவற்றை அறிமுகப்படுத்துதல், அதேபோன்று தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் அதன் நோக்கை அடைந்து கொள்வதற்காக, முழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. இலங்கை ஏற்றுமதிக்காக துணை நிற்கின்ற சூழல் ஒன்றை உருவாக்குவதன் மூலம் ஏற்றுமதி மேம்பாடு மற்றும் ஏற்றுமதி சமூகத்திற்கான வசதிகளை செய்வதற்காக நாம் எப்பொழுதும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

நாம் தற்போது புதிய துறைகளை பற்றிய ஆராய்ச்சி மற்றும் இலங்கையின் ஏற்றுமதிகளிடையே அதற்கடுத்த மட்டம் வரையிலான அபிவிருத்திக்காக பாரிய சாத்தியக் கூறுகளை எடுத்துக் காட்டுகின்ற தகவல் தொழில்நுட்பம்/ வியாபார செயல்முறை முகாமைத்துவம் (IT/BPM), நிர்மானத்துறை, கல்வி மற்றும் உடல்நலச் சுற்றுலாக் கைத்தொழில் போன்ற உபாயத்திட்ட ரீதியிலான முக்கியமான துறைகளை அடையாளங் காணும் பணியில் ஈடுபட்டு வருகின்றோம். அதேபோன்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தேசிய உபாயத்திட்டத்தில் வர்த்தகத்திற்காக உதவி வழங்கும் பணிகளுக்காக உபாயத்திட்ட ரீதியான திட்டத்தின் கீழ் உலகலாவிய சந்தைகளை இலக்காகக் கொண்டு புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சித்தவம் ஆகியவற்றை சீராக்குவதற்கான உதவி நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றோம்.

இந்த புதிய முன்னெடுப்பின் மூலம் இலக்கு வைக்கபட்ட அன்னியச் செலாவணிச் சம்பாத்தியத்தை அடைந்துகொள்வதற்கு எமது சக்திகளுக்கான வசதிகளை வழங்குவது துரிதப்படுத்தப்படுகின்றது. கடந்த வருடத்தில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் செயலாற்றுகையை நோக்கும்போது இந்த வருடம் உண்மையில் அன்னியச் செலாவணி சம்பாத்தியங்களில் குறிப்பிடத்தக்க அளவு துரித வளர்ச்சியொன்றை அடையப்பெற்ற வினைத்திறன் மிக்க வருடமாகும்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினதும், கௌரவ பிரதமர் அவர்களினதும், எமது அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சரினதும் வழிகாட்டல்கள் அதேபோன்று ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பதவியினரின் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை வெற்றிப் பாதையில் பயணித்து தொடர்ச்சியாக செயற்படுவதற்கு தேவையான சகல வசதிகளும் எம்மிடம் இருக்கின்றது என்பதை நம்புகிறேன். எதிர்காலத்தில் எமது விருது பெற்ற ஏற்றுமதியாளர்களுடன் பங்குடைமையை மேற்கொண்டு இலங்கை ஏற்றுமதியாளர்களை மிக உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு செல்கின்ற தெளிவான பாதையொன்றை செய்துகொடுப்பதற்கு திட்டமிடுகின்றேன்.

இந்திரா மல்வத்தை.
தலைவர்
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

அறிமுகம்

ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்கான முதன் நிலை நிறுவனமாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை காணப்படுகின்றது. 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கீழ் 1979 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தேசிய ஏற்றுமதி இலக்குகளை அமுல்படுத்துவதில் அதன் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்துவதில் கொள்கை ஆலோசகராக, கண்காணிப்பாளராக, மேம்படுத்துனராக, வசதியளிப்போராக மற்றும் அறிவு வழங்குனராக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதன் பணிகளை மேற்கொள்கின்றது.

செயற்பணி

"புத்தாக்கு உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான முதன்நிலை ஏற்றுமதி கேந்திர நிலையமாக இலங்கையை நிலைபெறச் செய்தல்" என்ற ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் செயற்பணியானது அரசின் அபிவிருத்தி தூரநோக்கு மற்றும் தேசிய ஏற்றுமதி உபாயத்தின் தூரநோக்கு உடன் ஒருங்கிணைந்துள்ளது.

தூரநோக்கு

"புத்தாக்கம், தொழில் முயற்சியாண்மை மற்றும் பூகோள ஒருங்கிணைப்பு" ஊடாக ஏற்றுமதி போட்டித்தன்மையை இயலச் செய்தல்" ஆகிய ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தூரநோக்கானது அதிகரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்று உழைப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதுடன் அதன் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பைச் செய்தல்.

2020 வரை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் கேபிஐ கள்

அ) ஐ.அ.டொ. 22 பில்லியன்கள் வரை ஏற்றுமதிசெய்வதுடன் அதிகரிப்பு அத்தோடு மொ.தே.உ. க்கு 2020 அளவில் 20 சதவீதம் பங்களிப்புச் செய்தல்.

ஆ) கற்ற மற்றும் திறன் உள்ள இளைஞர்களுக்கு 100,000 தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல்.

இ) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உதவியுடன் 20 நிலைபெறச் செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களின் ஏற்றுமதி புரள்வை அதிகரிப்பதற்கு வசதியளிப்புச் செய்தல்.

ஈ) ஏற்றமதி வியாபாரத்திற்காக 2,000 உள்நாட்டு தொழில்முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்வதற்கு உதவி புரிதல்.

உ) பூகோள பெறுமதிச் சங்கிலிகளுக்கும் மற்றும் பூகோள உற்பத்தி வலையமைப்புக்களுக்கும் புதிய 4 -5 பொருட்களை அறிமுகம் செய்தல்


2018 சனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்கான செயலாற்றுகை

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது, ஏற்றுமதிகளின் அபிவிருத்திக்கும் மேம்பாட்டுக்குமான முதன்மை வாய்ந்த அரசாங்க நிறுவனமாகும். இந்தச் சபை 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள அதேவேளையில், தேசிய ஏற்றுமதி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக உபாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் கொள்கை ஆலோசகர், கண்காணிப்பாளர், ஊக்குவிப்பு வசதியளிப்பாளர், அறிவு வழங்குனர் என்ற வகையில் பொருளாதாரத்தின் ஏற்றுமதித் துறையில் எண்ணிலடங்காத பங்களிப்பை ஆற்றி வருகின்றது.

"புத்தாக்க தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான ஒரு முக்கிய ஏற்றுமதி மையமாக இலங்கையை நிலைப்படுத்துதல்." என்ற ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் நோக்கு, அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கு மற்றும் தேசிய ஏற்றுமதி உபாயத் திட்டத்தின் நோக்கு என்பவற்றுடன் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

"புத்தாக்கம், தொழில்முயற்சித்துவம் மற்றும் உலகளாவிய ஒருங்கிணைப்பு மூலம் ஏற்றுமதி போட்டித்தன்மையை ஏற்படுத்துதல்." என்ற ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் செயற்பணி, அன்னியச் செலாவணிச் சம்பாத்தியத்தை அதிகரிப்பதும், அதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதிலும் கவனத்தைச் செலுத்தியுள்ளது.

ஏற்றுமதிச் செயலாற்றுகை – 2018




மூலம்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

வணிகப் பொருட்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதியிலிருந்து கிடைத்த இலங்கையின் அன்னியச் செலாவணி சம்பாத்தியமானது, மீளாய்வு ஆண்டில் ஏற்றுமதியில் கணிசமான அதிகரிப்பு ஒன்றைப் பதிவுசெய்து, 2017 ஆம் ஆண்டில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 15.1 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 2018 ஆம் ஆண்டில் 9% சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொலர் 16.4 பில்லியனை அடைந்துள்ளது.

வணிகப் பொருட்களின் ஏற்றுமதிச் சம்பாத்தியம் கடந்த ஆண்டில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 11.4 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 2018 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 11.9 பில்லியன்களைப் பதிவுசெய்துள்ளது. IT/BPM, கட்டுமானம், நிதிச் சேவைகள், சேவை வழங்கல் மற்றும் நல்வாழ்வுச் சுற்றுலா துறைகளின் சேவை ஏற்றுமதியிலுள்ள மதிப்பீடுகள் இந்த காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4.5 பில்லியன்களை அடைந்து, ஒட்டுமொத்தமாக 22% சதவீத வளர்ச்சியைக் காட்டுகின்றன.


மேலும், 2017 ஆம் ஆண்டிற்கு இணையாக, 2018 ஆம் ஆண்டின் ஆறு மாதங்களுக்கு மார்ச் (ஐ.அ.டொலர் 1,107.7 மில்லியன்), ஜூன் (ஐ.அ.டொலர் 1,024.4 மில்லியன்), ஜூலை (ஐ.அ.டொலர் 1,037.4 மில்லியன்), ஆகஸ்ட் (ஐ.அ.டொலர் 1,055.2 மில்லியன்) மற்றும் டிசம்பர் (ஐ.அ.டொலர் 1,025 மில்லியன்) மாதாந்த வணிகப் பொருட்களின் ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் ஐ.அ.டொலர் 1 பில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது.



மூலம்: இலங்கை மத்திய வங்கி மற்றும் இலங்கைச் சுங்கம்,

மேலும், புதிய தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்தின் கீழ் அடையாளங்காணப்பட்ட இலக்கு வைக்கப்பட்ட துறைகளில் நிலையான ஒரு செயலாற்றுகை சான்றாக உள்ளது. அதாவது, இலத்திரனியல் மற்றும் ஏற்றுமதித் துறைகள் 16.2% சதவீதத்தினாலும் உணவு மற்றும் குடிபான வகைகள் 22.06% சதவீதத்தினாலும் வளர்ச்சி அடைந்துள்ளது. இருப்பினும் வாசனைத் திரவியங்கள் மற்றும் செறிவுப் பொருட்கள் அதே போன்று வள்ளங்கள் தயாரிப்பு போன்ற துறைகளில் கட்டளைகள், உற்பத்தி மட்டத்தில் காணப்படுகின்ற படியினால் அவற்றின் ஏற்றுமதிகள் முறையே, 10.08% மற்றும் 50% சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.


மொத்த ஏற்றுமதியில் 33% சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற ஆடைத் துறை 12% சதவீத வரி விலக்கைக் கொண்டதாக GSP+ நன்மைகளின் காரணமாக ஐரோப்பிய சங்கத்தின் மூலம் புதிய கட்டளைகள் கிடைக்கப்பெற்றமையின் காரணமாக 2018 ஆம் ஆண்டில் அதன் இலக்குகளில் 100% சதவீதத்திற்கும் கூடுதலான பெறுமதி அடையப்பெற்றது. இதனிடையே மொத்த ஏற்றுமதியில் சுமார் 5% சதவீதமான டயர், கையுறை, மோட்டார் வாகன உபகரணங்கள் போன்ற இறப்பர் முடிப்புப் பொருட்களின் ஏற்றுமதி 3.78% குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளது.



ஆதாரங்கள்: இலங்கை சுங்க, இலங்கை மத்திய

ஏற்றுமதி இலக்கு நாடுகள்

ஏற்றுமதி இலக்கு நாடுகளை கவனத்தில் கொள்ளும்போது, தென் ஆசிய பிராந்தியத்திற்கான ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 1.097 மில்லியன் பெறுமதியை அடைந்து 10.12% சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியடைந்துள்ளது. 2017 இல் காணப்பட்ட பெறுமதியாகிய ஐ.அ.டொலர் 996 மில்லியனுடன் ஒப்பிடும்போது விசேடமாக 2017 இல் ஐ.அ.டொலர 689.4 மில்லியன் இந்தியாவுக்கான ஏற்றுமதிகள் நடப்பு ஆண்டில் ஐ.அ.டொலர 767.6 வரை 11.35% சதவீதம் வரை குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி அடைந்தது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதிகள் 5.65% சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதனிடையே, பிரித்தானியாவின் பவுண் தேய்மானம் அடைந்தமை மற்றும் ஐக்கிய இராச்சியம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகியமையின் காரணமாக நுகர்வோர் சந்தையில் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மையின் காரணமாக ஐக்கிய இராச்சியத்தின் ஏற்றுமதிகள் 5.15% சதவீதத்தினால் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்தது.



ஆதாரம்: இலங்கை சுங்க

1. கொள்கை முன்னெடுப்புகள்

இலங்கைக்கான தேசிய ஏற்றுமதி உபாயத் திட்டம் (NES)

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஜெனீவாவில் உள்ள சர்வதேச வர்த்தக நிலையத்தின் உதவியுடன் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பிரதான கொள்கை மட்டத்திலான செயற்பாடு, தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்தை வகுப்பதனை ஆரம்பித்தமை ஆகும். சர்வதேச வர்த்தகம் பற்றிய இராஜாங்க அமைச்சர் இந்தப் பணிக்காக முன்னனியில் செயற்பட்டார்.

அபிவிருத்தி உபாயத்திட்டம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினதும் தொடர்புடைய அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் சபைகளின் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளதும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் மூலம் கூட்டினைக்கப்படுவதுமான இலங்கைக்கான தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்தின் மூலம் இலங்கையை ஏற்றுமதி மையமாக மாற்றுவதும், ஏற்றுமதிகளின் அடுத்த மட்டம் வரையில் கொண்டு செல்வதினையும் நோக்காக கொண்டுள்ளது. பங்குதாரர்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற கலந்துரையாடல்கள் பலவற்றின் பின்னர் முடிவுறுத்தப்பட்ட தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டம் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் கௌரவ பிரதமர் அவர்களின் அனுசரணையுடன்

2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் திகதியன்று அலரி மாளிகையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்தின் நோக்கு, இலங்கையில் புத்தாக்கம் மற்றும் முதலீடு ஆகியவற்றின் மூலம் வழிநடாத்தப்படுகின்ற ஏற்றுமதி கேந்திர நிலையமாக இலங்கையை (Sri Lanka – An Export Hub) மாற்றுவதாகும். இந்த உபாயத்திட்டத்தின் மூலம் தகவல் தொழிநுட்பம் மற்றும் வியாபார நடவடிக்கைகளை முகாமைசெய்தல், நலன்மிக்க சுற்றுலா கைத்தொழில், வள்ளங்களைத் தயாரித்தல், வாசனைத் திரவியங்கள் மற்றும் செறிவுப் பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் குடிபானங்கள், மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் போன்ற 06 துறைகள் குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, வர்த்தக தகவல்களை விரிவுபடுத்துதல் மற்றம் மேம்படுத்துதல், தேசிய தர உட்கட்டமைப்பு வசதிகள், புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் சகல உற்பத்தித் துறைகளிலும் வழங்கல் சேவை, வர்த்தக உதவிப் பணிகள் என்பன உள்ளடங்குகின்றன.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழு மற்றும் அபிவிருத்தி உபாயத்திட்ட மற்றும் சர்வதேச வர்ததக அமைச்சின் தேசிய ஏற்றுமதி உபாயத்திட்ட மேற்பார்வை அலகு ஆகியவற்றின் நெருங்கிய கூட்டுறவுடன் தொடர்புடைய நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் மூலம் தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2. 2018 ஆம் ஆண்டின் தேசிய வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல்

மீளாய்வு வருடத்தில் சந்தை அணுகுகை உதவி நிகழ்ச்சித்திட்டம், தகவல் தொழிநுட்ப முன்னெடுப்புகள், இலத்திரனியல் மற்றும் மின்னியல் உபகரணங்கள் துறை ஆகியவற்றுக்காக பல்லின தேசிய ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம், வள்ளங்கள் தயாரித்தல், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், ஒழுங்குமுறைப்படுத்தல் வரைசட்டகத்தை விருத்திசெய்தல், வர்த்தக மேம்பாட்டு மேடையொன்றை தாபித்தல் மற்றும் 'எரம்பும' கடன் திட்டம் போன்ற வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சந்தை அணுகுகை உதவித் திட்டம்

சந்தை அணுகுகை உதவித் திட்டத்தின் கீழ் கம்பனிகளுக்கு தமது வியாபார அபிவிருத்தித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை பொறுப்பேற்பதற்கு உதவியளிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தில் இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள், அலங்கார மீன்கள், பாதணி, மென் ரக பொறியியல், தெங்கு மற்றும் தென்னந் தும்பு சார்ந்த உற்பத்திகள், மீன்பிடி உற்பத்திகள், ஆடைகள், வாசனைத் திரவியங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் போன்ற துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த உதவிகள் கொழும்பு, களுத்துறை, கண்டி, பொலன்னறுவை, கம்பஹா, புத்தளம், குருநாகல், மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய புவியியல்ரீதியான பகுதிகளை உள்ளடக்கியது. இந்தத் திட்டம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் செயற்பாட்டுக்கு வந்ததிலிருந்து, இயந்திரங்களை கொள்வனவு செய்தல், தொற்றுத் தடைக்காப்பு வசதிகளை தாபித்தல், தர மேம்பாடு, திறன் விருத்தி மற்றும் சந்தை அபிவிருத்தி, பார்கோட் முறையை செயல்படுத்துதல் போன்றவற்றுக்கு செலவுப் பகிர்வு அடிப்படையில் உதவி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சித் திட்டம் தனிப்பட்ட கம்பனிகளை மாத்திரமன்றி, குறிப்பிட்ட உற்பத்தி அமைப்புக்களையும் வலுவூட்டுகின்றது.

தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்பு நிகழ்ச்சித் திட்டம்

முக்கியமான ஆறு துறைகளில் கவனம் செலுத்தப்படுகின்ற அதேவேளையில் 2022 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 5 மில்லியன் இலக்காகக் கொண்டு தகவல் தொழிநுட்ப முன்னெடுப்புக்காக 'சம்பியனைக் கட்டியெழுப்பும் முன்னெடுப்பு' - அதிகூடிய சாத்தியமுள்ள ICT/BPM கம்பனிகளின் வளர்ச்சியை துரிதப்படுத்தக் கூடிய விதத்திலும் இலங்கையை அறிவுச் சேவை மூலங்களின் பயண இலக்காக மாற்றுவதற்கும், நாட்டின் நிலைமையை வழுப்படுத்துவதற்கும் டிஜிட்டல் வர்த்தக பெயரை நடைமுறைப்படுத்துவதும் உள்ளடங்குகின்றது. இதற்கு நாட்டிற்கு உள்ளேயும், நாட்டிற்கு வெளியேும் தூதுக் குழுக்கள் மற்றும் கண்காட்சிகளின் ஊடாக டிஜிட்டல் அல்லாத வர்த்தக பெயர் நாட்டின் நிலைமை அறிக்கை போன்றவையும் உள்ளடங்குகின்றன. உலகளாவிய அணுகுகையை மேம்படுத்துகின்ற அதேவேளையில் தகவல் தொழிநுட்ப முன்னெடுப்புகளின் மூலம் துறையின் எதிர்கால தேர்ச்சித் தேவைகளுக்காக வளங்களை மேம்படுத்ததுதல், எதிர்கால நிபுணத்துவ கேள்விகளை அடையாளங்காணுதல், அதேபோன்று தகவல் தொழிட்ப தொடர்பாடல் துறையில் புதியவர்களின் தேவைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் இடவசதிகளை வழங்குதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டுள்ளன. (பிராந்திய தொழில்முயற்சியை அபிவிருத்தி செய்தல்)

மேலும், பெறுமதி சேர்த்தலை மேற்கொள்ளுதல் மற்றும் இலங்கையை உலகளாவிய ரீதியில் மத்திய நிலையமாக நிலைநிறுத்துதல் ஆகியற்றுக்காக இலங்கையில் தேசிய CCT/BPM வர்ததகப் பெயர் IoI – "Island of Ingenuity" 2018 ஆம் பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

பன்னாட்டு கூட்டுறவு வெளிச்செல்லல் நிகழ்ச்சித் திட்டம்

இலங்கை இலத்திரனியல் மற்றும் மின்னியல் கம்பனிகளுக்கு பன்னாட்டு வளங்கள் வலையமைப்புடன் தொடர்புபடுதல், கூட்டுவர்த்தகத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் மற்றும் இலங்கையின் நிர்மாணத்தின் அடிப்படையில் தங்கியிருக்கின்ற பணிகளில் உடன்படிக்கை செய்யப்பட்ட உற்பத்தியாளர்களாக ஈடுபடக் கூடிய விதத்தில் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு பன்னாட்டு உலகளாவிய இலத்திரனியல் மற்றும் மின்னியல் கம்பனிகளை மூன்றிலிருந்து (3) ஐந்து (5) வரை கவர்ந்தீர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் நிறுவன ரீதியான பன்னாட்டு ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பபட்டுள்ளன. இந்தப் பணிகளை ஒப்படைப்பதற்காக நிபுணர் ஒருவரை தெரிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வள்ளங்கள் தயாரிப்பு – உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதும், ஒழுங்குமுறை வரைசட்டகத்தை மேம்படுத்துதலும்

வள்ளங்கள் தயாரிப்பு மற்றும் கடல்சார் சுற்றுலாக் கைத்தொழில் உலகம் பூராவும் பில்லியன் கணக்கிலான பணத்தை சம்பாதிக்கக் கூடிய கைத்தொழிலாக இருக்கின்ற அதேவேளையில், இதன் சாதகத் தன்மை ஏனைய நாடுகளின் போட்டிக்குரிய சந்தைகளின் பக்கம் செல்வதற்கு முன்னர், இந்த வளர்ந்து வரும் போக்குகளின் முழுமையான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். தேவையான உட்கட்டமைப்பு வசதிகளும் ஒழுங்கு விதிகளும் பெற்றுத் தரப்படுமானால் இந்த கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக இலங்கையில் அதிகூடிய சாத்திய வளங்கள் காணப்படுகின்றன.

24 மீற்றரிலும் பார்க்க குறைந்த நீளத்தைக் கொண்ட ஓய்வு வள்ளங்களின் தர நிர்ணயம் மற்றும் தரச்சான்றிதழ் முறைமை இல்லாமை கைத்தொழிலிலின் அபிவிருத்திக்கான பிரதான தடைகளில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மீன்பிடி வள்ளங்களை பதிவு செய்யும் முறைமையொன்று இருக்கின்ற போதிலும், ஓய்வு/ வினோத வள்ளங்களை பதிவு செய்வதற்கான முறைமையொன்று கிடையாது. நாட்டில் தொழிற்படுகின்ற பயணிகள் வள்ளங்கள் பெரும்பாலும் பாதுகாப்பு தேவைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. வள்ளங்கள் தயாரிப்புக் கைத்தொழில், கடற்பயணங்களை மேற்கொள்ளுதல் மற்றும் நாட்டிலுள்ள கடற்படை நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்காக இலங்கைக் கடலுக்கு கூடுதலாக வெளிநாட்டு வள்ளங்களை கவர்ந்தீர்த்தல், கடற் பயணத்தை அடிப்படையாகக் கொண்ட செலவுகளுடன் கடற் பயண சுற்றுலாக் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் கடற் பயண செயற்பாடுகளுக்காக ஊக்குவித்தல் ஆகியவற்றுக்காக ஒழுங்குபடுத்தல் வரைசட்டகமொன்றை ஏற்படுத்துவதன் மூலம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதானமான தலையீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையானது, அதன் உபாய ரீதியான அமைவிடம் மற்றும் அழகான கடற்கரை ஆகியவற்றின் காரணமாக பிராந்தியத்தின் கடற்பயண மையமாக இருப்பதற்கு நன்றாக அமைந்துள்ள போதிலும் உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறையின் காரணமாக மிகக் குறைந்தளவு கடற்பயணம்/ கடல்சார் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

வள்ளம் தயாரிப்புத் துறைக்கு வள்ளங்களை தயாரித்தல் (விஷேடமாக 20 மீற்றருக்கு கூடுதலான வள்ளங்கள்), (நங்கூரமிடும் தளங்கள் அல்லது கடல் சார்) ஆரம்பித்தல் அல்லது பரிசீலனை செய்தல் வழுக்கும் வழிகள் அல்லது ஆரம்பிக்கும் இடங்கள் மற்றும் பழுதுபார்த்தலுக்காக தடாக வசதிகள் இல்லாமை இந்த சகல உலகளாவிய சந்தைகளுக்கும் போட்டிக்குரிய தன்மைக்கு தாக்கம் செலுத்துகின்ற அதேவேளையில், வள்ளம் தயாரிப்பு மற்றும் சமுத்திர சுற்றலா கைத்தெரிழல் ஆகியவற்றுக்காக நேரடி வெளிநாட்டு முதலீடு மற்றும் தேசிய முதலீடு குறைவடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் வள்ளங்கள் தயாரிப்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் நிறுவனம்' ஆகியவற்றின் மூலம் கைத்தொழிலில் தற்போது ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதற்காக சாத்தியவளம் உள்ள பிரதேசங்களாக தெற்கு கடற்கரையிலுள்ள கொக்கலை மற்றும் வெலிகம பிரதேசங்கள் அடையாளங் காணப்பட்டுள்ள அதேவேளையில், வள்ளங்களை தயாரிப்பவர்களுக்காக வள்ளங்களை நிறுத்தி வைத்தல், ஆரம்பித்தல் மற்றும் ஆராய்ச்சி வசதிகளை செய்வதற்கு தப்பரதொட்ட (வெலிகம) நீர்முறிவு ஒன்றை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

கப்பரதொட்ட (வெலிகம) நீர்முறிவு ஒன்றை நிர்மாணிப்பதற்கான சாத்தரியவள ஆய்வு மற்றும் விபரமான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வள்ளங்களின் கண்காட்சி மற்றும் வள்ளங்களை செலுத்தும் விழா 2018 ஒக்டோபர் மாதத்தில் காலி நகரத்தில் வெற்றிகரமாக நடாத்தகப்பட்டது. இலங்கை வள்ளங்கள் தயாரிப்பாளர்களுக்கு உல்லாச படகுகளையும், ∴பெறி வள்ளங்களையும், கடற்படை வள்ளங்களையும், பொருட்களை கொண்டு செல்லும் வள்ளங்களையும், நீர்த் தாங்கி வள்ளங்கள், டெக்ஸி வள்ளங்கள் போன்றவற்றுக்காக பிரதானமாக புரூண்டி நாட்டின் கட்டளைகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த அதேவேளையில், நிர்மாணம் மற்றும் விலைகள் பற்றிய கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தனி ஒருநாடு என்ற வகையில் எமது ஏற்றுமதிகளை சர்வதேச ரீதியில் மேம்படுத்துவதற்காக வர்த்தக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றை ஏற்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எதிர் கால மற்றும் தற்போதைய வாங்குனர்களுக்காக வசதிகளை வழங்குவதற்கும் இலங்கை தொழில் முயற்சியாளர்களுக்காக உரிய விதத்திலும் உரிய நேரத்திலும் சந்தைத் தகவல்களை அடைந்து கொள்வதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் e-Marketing Place நேரடி இணைய வழி விற்பனைத் தளமொன்றினூடாகவும் B2B சீராக்கல் வசதியினூடாகவும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை மேம்படுத்தப்படவுள்ளது.

"எரம்பும" கடன் திட்டம்

இது என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான கடன் திட்டமாகும். புத்தாக்க வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காக நிதி உதவியை வழங்குவதன் மூலம் வர்த்தகமயப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திக்காக இளம் பட்டதாரிகளுக்கு அவர்களுடைய தொழிலொன்றை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பொன்று வழங்கப்படும். வியாபார திட்டமிடலின் மூலம் சாத்தியவள வியாபார யோசனைகளுக்கான தகுதியின் அடிப்படையில் இந்தக் கடன் வழங்கப்படுகின்றது. 35 வயதிற்குக் குறைந்த பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு அல்லது தேசிய தொழிற்தகைமை (NVQ) 5,6 மற்றும் 7 மட்டங்களிலுள்ள சான்றிதழ்களைப் பெற்றவர்களுக்காக இந்தக் கடன் வழங்கப்படுகின்றது. இது வரை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் மூலம் விவசாயக் கைத்தொழில் உற்பத்தித் துறை ICT/BPM சுற்றுலாக் கைத்தொழில், சில்லறை வர்த்தகம் போன்ற துறைகளில் 262 விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டு கடன் வழங்குவதற்காக கவனத்தில் கொள்ளும் பொருட்டு இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஆலோசனைக் குழுக்கள்

தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக முடிப்பு ஆடைகள் வள்ளம் மற்றும் கப்பல் தயாரிப்பு, தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகள், இலத்திரனியல் மற்றும் மின்னியல் உபகரணங்கள், மாணிக்கக் கற்கள், வைரக் கற்கள் மற்றும் ஆபரணங்கள், ICT/BPM, மென் பொறியியல் விஞ்ஞானம், வழங்கல் சேவைகள், தேசிய தர உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள் மற்றும் பிளாஸ்டிக், கடல் உணவுகள், வாசனைத் திரவியங்கள், வர்த்தக மேம்பாட்டு மற்றும் வர்த்தகத் தகவல் சுற்றுலா கைத்தொழில் மற்றும் ஆயர்வேதத் துறைகள் ஆகியவற்றுக்காக 16 புதிய ஆலோசனைக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. தனியார் மற்றும் அரசாங்கத் துறையின் ஒத்துழைப்புடன் தாபிக்கப்பட்டுள்ள இந்த ஆலோசனைக் குழுக்களின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட ஏற்றுமதிகளுக்காக தாக்கம் செலுத்துகின்ற பிரதான பிரச்சினைகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகையை மேம்படுத்தும் வாய்ப்புக்கள் அடையாளங் காணப்படுகின்றன.

3. உள்நாட்டு புதிய அடுத்த பரம்பரைத் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்

2000 புதிய அடுத்த பரம்பரை ஏற்றுமதியாளர்களை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டம் - சிறந்த ஏற்றுமதியாளர்களாக இருத்தல்

2017 - 2020 கால எல்லைக்குள் 2000 புதிய ஏற்றுமதியாளர்களை உருவாக்கும் அரசாங்கத்தின் தேசிய நிகழ்ச்சித் திட்டம் 2017 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட அதேவேளையில், மத்திய மாகாண தொழில்முயற்சியாளர்களுக்கான இரண்டாவது நிகழ்ச்சித் திட்டம் 2017 ஆம் ஆண்டில் கண்டியில் நடாத்தப்பட்டன. தென் மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கான மூன்றாவது நிகழ்ச்சித் திட்டம் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதியன்று மாத்தறையில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் வாசனைத் திரவியங்கள், மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள், பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் குடிபான வகைகள், தென்னந் தும்பு மற்றும் மீன்பிடி உற்பத்திகள் போன்ற துறைகள் இலக்காகக் கொள்ளப்பட்டன. வடமேல் மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கான நான்காவது விளக்கமளிக்கும் கருத்தரங்கு 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியன்று குருணாகலையில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் பிராந்திய தொழில்முயற்சிப் பேரவைகளுக்கு மேலதிகமாக விளக்கமளிக்கும் கருத்தரங்கு, சிறிய அளவிலான கண்காட்சிகள், உள்நாட்டு முன்னணி தொழில்முயற்சியாளர்களுடன் நடாத்தப்படுகின்ற வட்ட மேசை கலந்துரையாடல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

தொழில் முயற்சியாளர்களிடமிருந்து சுமார் 1500 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள அதேவேளையில் அவற்றை கவனத்தில் கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட 516 விண்ணப்பங்களில் 282 விண்ணப்பங்களுக்காக அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 44 நேரடி ஏற்றுமதியாளர்களினால் ஐ.அ.டொலர் 3 மில்லியனுக்கு கிட்டிய பெறுமதியைக் கொண்ட ஏற்றுமதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில், 55 மறைமுகமான ஏற்றுமதியாளர்களினால் சுமார் ஐ.அ.டொலர் 4.4 மில்லியன் பெறுமதியான ஏற்றுமதி பொருட்கள் வழங்கப்படுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் அடையாளங் காணப்பட்ட 30 தொழில் முயற்சியாளர்களுக்காக 2018 மார்ச் மாதம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளிலும், யாழ்ப்பான மாவட்டத்தில் 14 தொழில் முயற்சியாளர்களுக்காக 2018 ஜூன் மாதம் 07 மற்றும் 08 ஆம் திகதிகளிலும், கண்டி மாவட்டத்தின் 30 தொழில் முயற்சியாளர்களுக்கு 2018 ஆகஸ்ட் மாதம் 13 மற்றும் 14 ஆம் திகதிகளிலும் M/S ERNEST & YOUNG கம்பனியின் "உதவியுடன் வியாபார திட்டமொன்றை தயாரித்துக் கொள்வது எப்படி" என்பது சம்பந்தமான செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது. இந்த ஆரம்ப செயலமர்வுகளுக்கு மேலதிகமாக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பிராந்திய அலுவலகங்களிலும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவியுடனும் தொழில்முயற்சியாளர்களினால் அவர்களின் வியாபாரத் திட்டங்கள் தயாரித்துக் கொள்ளப்பட்டன.

சர்வதேச ஏற்றுமதி நிகழ்ச்சித் திட்டங்கள்

2018 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை டுபாயில் இடம் பெற்ற GULFOOD 2018 கண்காட்சிக்காக கண்காணிப்பாளர்களாக பங்குபற்றுவதற்காக 2000 புதிய ஏற்றுமதியாளர்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மூன்று கம்பனிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் அவர்களுக்கு சர்வதேச நிகழ்வுகளுக்கு வெளிப்படுத்தும் வாய்ப்புக்கள் கிடைத்தது. புதிய ஏற்றுமதியாளர்கள் 2000 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பதிவு செய்து உணவு மற்றும் குடிபான துறையில் சாத்தியத்தன்மை உள்ள மேலும் 13 சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களுக்கு 2018 மே மாதம் 28 ஆம் திகதி முதல் ஜுன் மாதம் 02 ஆம் திகதி வரை தாய்லாந்தில் இடம்பெற்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பங்குபற்றினர். தொழிற்சாலைகளை பார்வையிடுதல், தாய்லாந்தின் பொதியிடல் நிலையமொன்றில் இடம்பெற்ற பயிற்சி நிழ்ச்சித் திட்டம் மற்றும் THAIFEX கண்காட்சியை பார்வையிடுதல் என்பன இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தன. பங்குபற்றுனர்களுக்கு பொதியிடல் மற்றும் உற்பத்தியை மேம்படுத்துல் பற்றிய பெறுமதிவாய்ந்த தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

2018 செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதி வரை இந்தியாவின் மும்பை நகரில் இடம்பெற்ற ‘‘Annapoorna’’- இந்தியாவின் உலக உணவுக் கண்காட்சிக்கு இணையாக இடம்பெற்ற உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குகொள்ளுதல் ஆகியவற்றுக்காக உணவு மற்றும் குடிபான வகைக் கைத்தொழிலின் ஏற்றுமதிக்கு தயாராகவுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சியாளர்களை உள்ளடக்கிய 10 உறுப்பினர்களைக் கொண்ட வியாபார தூதுக் குழுவுக்காக உதவி வழங்கப்பட்டது. கண்காட்சியை பார்வையிடுதல் B2B கலந்துரையாடல், அதேபோன்று தொழிற்சாலைகளுக்கான விஜயம் என்பன இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்கியிருந்தது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களின் 30 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக் குழு ஒன்றின் மூலம் சீனாவின் குஅன்ஷு நகரத்தில் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை இடம்பெற்ற 15 ஆவது சர்வதேச சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி கண்காட்சியில் (CISMEF) இலங்கை சிறந்த முறையில் காட்சிப்படுத்தப்பட்டது. இந்த கண்காட்சியின் மூலம் பங்கு பற்றிய சர்வதேச சந்தைகளில் சாத்தியத் தன்மையுள்ள பங்குதாரர்களுடன் தொடர்பு கொள்வதற்காக வினைத்திறன்மிக்கதும் வலுவானதுமான மேடையொன்றாக அமைந்தது. CISMEF நடைபெறுகின்ற வேளையில் சீனாவிலுள்ள இலங்கை தூதுவரினால் சீனாவின் சந்தைகளுக்காக தயார் நிலையிலுள்ள இலங்கையின் உற்பத்திகள் பற்றி விளக்கமளிப்பதற்காக 2018 ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதியன்று வர்த்தக கருத்தரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

வட மாகாணத்தில் அடையாளங் காணப்பட்ட எட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களுக்காக 2018 சனவரி மாதம் 26 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சர்வதேச வர்த்தக கண்காட்சி - 2018 இல் பங்குபற்றி, அவர்களின் உற்பத்திகளை காட்சிப்படுத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டது. 10 சிறிய மற்றும் நடுத்தர அளவு அச்சிடல் தொழிலாளர்களுக்காக அவர்களின் உற்பத்தியை/ சேவையை காட்சிப்படுத்துவதற்கு வசதிகளை வழங்குவதற்காக Srilanka Print 2018 ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கண்காட்சிக் கூடமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. 2018 மார்ச் மாதம் 15 ஆம் திகதியன்று கொழும்பில் இடம்பெற்ற இலங்கை அச்சகர்களின் கருத்தரங்கிற்கு பங்குபற்றுவதற்காக இரண்டு கம்பனிகளுக்கு உதவி வழங்கப்பட்டது. மொனராகலையில் இடம்பெற்ற V2025 கண்காட்சியில் தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்துவதற்காக பத்து கம்பனிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

2018 மார்ச் மாதம் 15 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற WTO வர்த்தக வசதிகளை வழங்குதல் பற்றிய செயலமர்வுக்கு பங்குபற்றுவதற்காக ஒன்பது கம்பனிகளுக்கு உதவி வழங்கப்பட்டது. UNIDO இனால் ஒழுங்கு செய்யப்பட்ட ‘‘தரச் சான்றிதழ் மற்றும் உணவுப் பாதுகாப்புத் தரங்கள் மற்றும் உணவுப் பெறுமதிச் சங்கிலிகளில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களின் ஏற்றுமதி போட்டித் தன்மையை அதிகரிப்பதற்கான நடைமுறைகள்’’ எனும் தலைப்பில் நடாத்தப்பட்ட விளக்கமளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக மேல் மாகாணத்திலுள்ள சாத்தியமுள்ள நான்கு கம்பனிகள் பங்குபற்றியது.

வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் உள்ள தும்பு சார்ந்த உற்பத்தி ஏற்றுமதியாளர்கள் மற்றும் சாத்தியமுள்ள ஏற்றுமதியாளர்கள் ஆகியோரின் பொருட்டு ஏற்றுமதி சந்தைகளுக்காக தரச்சிறப்பு மிக்க தும்பு சார்ந்த உற்பத்திகளை வழங்குவதனை மேம்படுத்துவதற்காக சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை மேம்படுத்தும் தேவைப்பாட்டின் தற்போதைய போக்கு பற்றி அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நெதர்லாந்தின் PUM உடன் கலந்துரையாடி தொழிநுட்பப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது.

தொழிநுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், மத்திய மாகாணத்திலுள்ள 21 கம்பனிகளுகாக உணவு மற்றும் குடிபான வகை மற்றும் வாசனைத் திரவியங்களுக்கு சர்வதேச தரச் சான்றிதழ்களை, உதாரணமாக ISO 9001, ISO 14001, ISO 2200 மற்றும் ISO 50001 ஆகியவற்றுக்கு விண்ணப்பிப்பதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினூடாக உதவி வழங்கப்பட்டது.

ஏற்றுமதி வியாபாரத்திற்கு பெண் தொழில் முயற்சியாளர்கள்

2018 பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை இடம்பெற்ற பாதணி மற்றும் தோல் பொருள் கண்காட்சி 2018 இல் பங்கு பற்றுவதற்கு வடிவமைப்பு அபிவிருத்தி மற்றும் வசதி அளித்தல் தொடர்பாக பாதணி தயாரிப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள ஆறு பெண் தொழில்முயற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். அவர்கள் ரூபா 1 மில்லியன் பெறுமதியான விற்பனைகளை அதே இடத்தில் பெற்றுக்கொண்ட அதேவேளையில், DSI, DI, Bata, VKC மற்றும் ஏனைய வழங்குனர்களுடன்/ வினியோகஸ்தர்களுடன் பாதணிகளை வழங்குவது சம்பந்தமாக வெற்றிகரமாக கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

2018 மார்ச் மாதம் 8 ஆம் திகதியன்று மகளிர் தினத்திற்கு இணையாக 19 தொழில்முயற்சியாளர்கள் மற்றும் 12 சேவை அமைப்புகள் ஆகியவற்றின் பங்குபற்றுதலுடன் ஏற்றுமதி சந்தை இடங்கள் பற்றிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் பெண் தொழில்முயற்சியாளர்கள் அவர்களின் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்திய அதேவேளையில், தொழில்முயற்சியாளர்கள் ஏற்றுமதி கம்பனிகள் மற்றும் சேவை வழங்குனர்கள் ஆகியோருக்காக ஒரே கூரையின் கீழ் சந்தை வாய்ப்புக்களை கூட்டிணைப்பதற்காக வாய்ப்புகள் வழங்கப்பட்டன. ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட நடுவர் குழு ஒன்றின் மூலம் சிறந்த முதல் மூன்று பெண் தொழில்முயற்சியாளர்களைத் தெரிவு செய்து முதலாவது இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களுக்காக முறையே ரூபா 300,000/= ரூபா 200,000/= ரூபா 100,000/= வீதம் அவர்களின் ஏற்றுமதிக்கு பெறுமதி சேர்ப்பதை வலுவூட்டுவதற்காக நிதிரீதியான உதவி கிடைத்தது. UNIDO வின் உதவிக்காக ஏழு பெண் தொழில்முயற்சியாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் நிறுவனத்தின் இணையத் தளமாகிய "She Trade" இற்கு மூன்று கம்பனிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

2018 மே மாதம் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் நிறுவனத்தின் உதவியுடன் E&Y நிறுவனத்தினால் 20 பெண்களுக்கு வியாபார திட்டமிடல் செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டது.

ஒரு கிராமம் ஒரு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ஏற்றுமதி வளங்கள் அடிப்படையை மேம்படுத்துதல்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப் பகுதியில் நுவரகம்பலாத்த கிழக்கில் உள்ள 51 பயிர்ச் செய்கையாளர்களுக்காக இஞ்சி மற்றும் மஞ்சள் விவசாயிகள் கொத்தணியை ஏற்படுத்துவதற்கும் சந்தைகளுடன் தொடர்புபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் வசதிகளும் வழங்கப்பட்பட்டன. வெட்டுத் தாவர பயிர்ச் செய்கையாளர்களுக்காக இரத்தினபுரி மாவட்டத்தில் கருத்தரங்கொன்று/ தொழிநுட்ப அமர்வொன்று நடாத்தப்பட்ட அதேவேளையில் 28 பயிர்ச் செய்கையாளர்கள் ஏற்றுமதியாளர்களுடன் தொடர்புபடுத்தப்பட்டனர்.

மாஸ்பொத பிரதேச செயலகப் பிரிவில் 60 மிளகு பயிர்ச் செய்கையாளர்களுக்கு 40 வெட்டுத் தாவர பயிர்ச் செய்கையாளர்களுக்கும் மூன்று விழிப்புணர்வு நிகழ்சிசித் திட்டங்கள் நடாத்தப்பட்ட அதேவேளையில், கேகாலை, உடுநுவர மற்றும் தொலுவ பிரதேசத்தில் 128 நபர்களின் பங்குபற்றுதலுடன் கைப்பணி வடிவமைப்பு மற்றும் இயற்கை சாயமிடல் பற்றிய நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன.

நீளவள கைப்பணி வடிவமைப்பு சங்கத்தினதும் லியனவல ஆபரண கிராமத்தினதும் 22 ஆபரண உற்பத்தியாளர்களுக்கு 2018 மார்ச் மாதம் 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் வடிவமைப்பு பற்றிய நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டது. 120 வாசனைத் திரவியங்கள் மற்றும் அதற்கு சமமான தயாரிப்பாளர்களுக்கு வழங்கலை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்று நுவரெலிய மாவட்டத்தில் ஹங்குரங்கெத பிராதேசிய செயலாளர் அலுவலகத்தில் நடாத்தப்பட்டது.

ஆடைக் கைத்தொழிலிற்கான நற்பெயரைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம்

ஆடைக் கைத்தொழிலில் வளர்ச்சியொன்று காணப்பட்ட போதிலும், தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக கைத்தொழிலில் சவால்கள் பலவற்றுக்கு முகங்கொடுத்து வருகின்றது. இந்தப் பிரச்சினைக்கான தீர்வுகளைத் தேடுவதற்காக இந்தக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் கவனமின்மையின் பிண்ணனியில் இருக்கக் கூடிய விடயங்கள் அதேபோன்று தற்காலத்தில் இந்தத் துறையுடன் தொடர்புபட்ட சமூக நோக்கினை புரிந்துகொள்வதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் போது சமூக மனப்பாங்கை மாற்றும் தேவை முதன்மையானதாக அடையாளங் காணப்பட்டுள்ளது. பிரதான பங்குதாரர்களாகிய சமூகத் தலைவர்கள், செல்வாக்குள்ளவர்கள் மற்றும் கைத்தொழில் செயற்பாடுகளுடன் தொடர்புபடாத போதிலும் வாழ்வாதாரத்திற்காக ஏனைய மாற்று முறைகள் பற்றி காத்திருக்கின்ற எதிர்பார்த்திருக்கின்ற சாத்தியமுள்ள ஊழியப் படையை சார்ந்து வாழ்கின்ற நபர்களாவர். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக சமூகத்திலும் சாத்தியமுள்ள தொழிலாளர்களிடத்திலும் மனப்பாங்கு மாற்றமொன்றை ஏற்படுத்துதல் அதேபோன்று இந்தத் துறைக்காக அதிகளவில் தொழிலாளர்களை கவர்ந்தீர்த்துக் கொள்ளும் வழிகளாக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உபாய ரீதியானதும் செயற்பாட்டு ரீதியானதுமான திட்டமொன்றை தயாரிப்பதற்காக பீஆர் கம்பனிக்கு அதிகாரமளிப்பதன் மூலம் நற்பெயரைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டமொன்றை நடாத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.



மாகாண ஆபரண வடிவமைப்பாளர்களுக்காக/ தயாரிப்பாளர்களுக்காக வடிவமைப்பை செயல்படுத்தும் செயலமர்வு

2016 ஆம் ஆண்டில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் தாய்லாந்தில் பயிற்சி அளிக்கப்பட்ட உள்நாட்டு வடிவமைப்பு நிபுணர்கள் இருவரின் உதவியுடன் நீளவல மற்றும் லியன்வல கைப்பணி கிராமங்களில் உள்ள 16 அங்கத்தவர்களுக்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் மத்திய மாகாணத்தில் இரண்டு நாள் செயலமர்வு ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

4. இலங்கையின் உற்பத்திகளுக்கு சேவைகளுக்கும் உலகளாவிய சந்தைகளுக்கான அணுகுகை உருவாக்குதல்

உணவு மற்றும் குடிபான வகைகள்

உணவு மற்றும் குடிபான துறையில் 21 காட்சிப்படுத்துனர்களினது 2000 புதிய ஏற்றுமதியாளர்கள் திட்டத்தின் மூலம் 3 அவதானிப்பாளர்களினதும் பங்குபற்றுதலுடன் 2018 பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை துபாயில் இடம்பெற்ற GULFOOD 2018 கண்காட்சியில் இலங்கையின் பங்குபற்றுதல் ஒழுங்கு செய்யப்பட்டது. 06 மாத மதிப்பீட்டுக்கு அமைவாக பங்குபற்றிய கம்பனிகள் ஐ.அ.டொலர் 7.24 பெறுமதியை கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த அதேவேளையில் ஐ.அ.டொலர் 8.69 மில்லியன் பெறுமதியைக் கொண்ட கட்டளைகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டுள்ள அதேவேளையில் இது வரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டளைகளின் பெறுமதி ஐ.அ.டொலர் 3.83 பில்லியன் ஆகும்.

தேயிலை மற்றும் துணை உணவுகளுக்காக புதிய சந்தைகளை வெளிப்படுத்தியமை புதிய தொழிநுட்பங்களை அடையாளம் காணுதல் கூட்டு வியாபாரங்களுக்கான வாய்ப்புக்களை வழங்குதல். ஒத்துழைப்பு முதலீடு, புதிய உற்பத்திகளை அடையாளம் காணுதல், புதிய சந்தைப்போக்கு அவதானிப்புகள் ஊடாக காட்சிப்படுத்துனர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொண்டனர். அதேபோன்று அவர்களின் உற்பத்திகள் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க (MENA) சந்தைகளுக்காக அறிமுகப்படுத்தும் வாய்ப்பு கிடைத்தது.

பல கம்பனிகளுக்கு அவர்களின் கம்பனி வர்த்தக நாமத்தை சர்வதேச சந்தைகளுக்கு அறிமுகப்படுத்தும் வாய்ப்பு கிடைத்த அதேவேளையில் அதற்கு இணையாக தற்போது இருக்கின்ற மற்றும் புதிய வாங்குனர்களுடன் 2B2 அமர்வுகள் நடாத்தப்பட்டன.

இலங்கை உணவு மற்றும் குடிபான வகைகளை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 2018 ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை பாரிஸ் நகரில் இடம்பெற்ற உலகின் மிகப் பெரிய புதிய உணவுக் கண்காட்சி ஆகிய SIAL France கண்காட்சியில் தேசிய கண்காட்சி கூடமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த கண்காட்சியில் உணவு மற்றும் குடிபான வகைகள் பலவற்றின் மேம்பாட்டிற்காக 14 கம்பனிகள் பங்குபற்றினர். கண்காட்சியுடன் தென்னை உற்பத்தியை மேம்படுத்துகின்ற கம்பனிகளுக்காக பிரான்ஸின் முன்னனி வாங்குனர்களுடன் வெற்றிகரமான வர்த்தக கலந்துரையாடல்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. பிரான்ஸின் பிரதான தெங்கு சார்ந்த உற்பத்தி இறக்குமதி செய்கின்ற கம்பனி ஆகிய BIO கம்பனி சேதன தெங்கு சார்ந்தவை அடங்கிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இலங்கையில் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டது. பங்குபற்றுனர்களுக்காக ஐ.அ.டொலர் 2,85,000 பெறுமதியைக் கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட கட்டளை கிடைக்கப்பெற்றது.

சேதன உணவு உற்பத்தி

ஜேர்மனியில் உள்ள GIZ மற்றும் IFORM நிறுவனத்ததின் ஒத்துழைப்புடன் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை ஒழுங்கு செய்யப்பட்ட சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக சேதனத் துறையிலுள்ள 06 கம்பனிகள் பங்குபற்றியன.

பங்குபற்றுனர்களுக்கு சேதன உற்பத்திற்காக உலகின் பிரதான சந்தைக் கண்காட்சியாகிய BioFach 2018 எனும் கண்காட்சிக்கு விஜயம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. மேலும் அவர்களுக்கு பெருந்தோட்டச் செய்கையாளர்கள், ஏற்றுமதியாளர்கள், சிறப்பு சந்தைகள், சான்றுப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்கள் போன்ற ஜேர்மன் நாட்டின் சேதன சந்தையிலுள்ள பிரதான ஏற்பாட்டாளர்களையும் சந்திக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. சான்றுப்படுத்தப்பட்ட சேதன சந்தைகளுக்கான சுற்றுலாவின் போது அவர்களுக்கு ஒருங்கிணைந்த சேதன சந்தை தொகுதி பற்றிய சிறந்த அனுபவங்கள் கிடைத்தன. BioFach 2018 சுற்றுலா உற்பத்தி வசதிகள், சேதன மொத்த விற்பனை, சிறப்புச் சந்தைகள், புதிய வியாபார வாய்ப்புக்களை அடையாளம் காணுவதற்காக வாங்குனர்களை சந்தித்தல், போட்டிக்குரிய நாடுகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற உற்பத்திகள் பற்றி தேடிப் பார்த்தல், பல்வேறு பயண இலக்குகளின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திகளை களஞ்சியப்படுத்துதல், பெறுமதி சேர்த்தல், நுகர்வோரை இலக்காகக் கொண்ட உற்பத்திகளை நிலைநிறுத்துதல் மற்றும் பொதியிடுதல் பற்றியும் இந்த சேதன துறைக்கான புதிய ஐரோப்பிய ஒன்றிய ஒழுங்கு விதிகள் பற்றியும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

கடல் உணவு



சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தப்படாத மீன்களுக்கான தடையை நீக்குதல், GSP+ சலுகையை மீணடும் பெற்றுக் கொண்டமை ஆகியவற்றைத் தொடர்ந்து மீண்டுமொரு முறை இலங்கை ஆசியாவிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்காக முதல் இடத்திலுள்ள சூரை மீன் ஏற்றுமதியாளராக மாறி இலங்கையின் கடல் உணவு பிரதான இடத்தில் வைத்துக் கொண்டு நாட்டுக்கு மேலதிக

வருமானமொன்றை கொண்டு வந்து தனது ஏற்றுமதி அளவினை அதிகரித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. இதன் காரணமாக இலங்கையில் கடல் உணவுக் கைத்தொழிலுக்காக இந்த உலகளாவிய வாய்ப்புக்களின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு GSP+ சலுகையின் முழுமையான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் பெல்ஜியம் நாட்டின் பிரஸல் நகரில் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி மதல் 26 ஆம் திகதி வரை இடம்பெற்ற SeaFood Expo Global கண்காட்சிக்காக (கடல் உணவு ஏற்றுமதி கம்பனிகள் 09 பங்ளிப்புடன்) இலங்கையின் கண்காட்சிக் கூடமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இலங்கை கண்காட்சி கூடத்திற்காக 1200 பார்வையாளர்களை கவர்ந்தீர்த்துக் கொள்ளக் கூடியதமாக இருந்த அதேவேளையில் காட்சிப்படுத்துனர்கள் ஐ.அ.டொலர் 1.4 மில்லியன் பெறுமதியைக் கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளைக் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த அதேவேளையில் ஐ.அ.டொலர் 3 இலட்சம் கட்டளைகள் சம்பந்தமாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது. உலகளாவிய வியாபாரம் ஆரம்ப கலந்துரையாடலின் போது கலந்துரையாடப்பட்ட தலைப்புகளுக்கிடையே உற்பத்தியை மேம்படுத்தும் புத்தாக்கம் மற்றும் சந்தை சாத்தியத்தன்மை என்பன அமைந்திருந்தன.

2018 மே மாதம் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை தாய்லாந்தில் இடம்பெற்ற சூரை மீன் கருத்தரங்கிற்காக பங்குபற்றுவதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் மூலம் கடல் உணவு ஏற்றுமதி கம்பனிகளுக்காக உதவி வழங்கப்பட்டது. பங்குபற்றுனர்களுக்கு உலகளாவிய சூரை மீன் கைத்தொழிலின் புதிய போக்கு மற்றும் மேம்படுத்தல் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

வாசனைத்திரவியங்களும், செறிவூட்டிகளும்

2018 டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை கொலம்பியாவில் இடம்பெற்ற IFEAT மாநாட்டுக்கு இணையாக இரண்டு (02) கம்பனிகளுக்கு உதவி வழங்கப்பட்ட அதேவேளையில் அதில் அவர்களுக்கு உலகளாவிய உற்பத்தியாளர்களுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்பக் கூடியதாக இருந்தது. பங்குபற்றுளனர்களுக்கு ஐ.அ.டொலர் 1,11,0000 பெறுமதியைக் கொண்ட அத்தியவசிய எல்லைக்கான கட்டளை கிடைத்துள்ள அதே வேளை ஐ.அ டொலர் 3,33,000 பெறுமதியைக் கொண்ட கட்டளைகள் சம்பந்தமாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மலர்ச்செய்கை

2018 டிசம்பர் மாதம் 04 ஆம் திகதியன்று ஏற்றுமதிக்காக உயிருள்ள தாவர உற்பத்திற்காக தொழிநுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டமொன்று ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் நடாத்தப்பட்டது. தேசிய பயிர்த் தொற்றுத் தடைக்காப்பு சேவை மற்றும் தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற செயலமர்வில் 100 பங்குபற்றுனர்கள் நன்மை பெற்றனர். இதற்காக ஏற்றுமதியாளர்கள், 2000 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அடையாளங்காணப்பட்ட சாத்தியமுள்ள ஏற்றுமதியாளர்கள், பெண் தொழில்முயற்சியாளர்கள், எரம்பும கடன் திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்கள், சுவகஸ் மலர்ச் செய்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவு மலர்ச் செய்கையாளர்கள் பங்குபற்றினர். பங்குபற்றுனர்களுக்கு கைத்தொழிலில் அவர்களின் தொடர்பு வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கும் உயிர் தாவர ஏற்றுமதியில் பின்பற்ற வேண்டிய தொற்று தடைகாப்பு தேவைகள் பற்றியும் அறிவைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஆடைத்துறை மூலங்கள் (பாரிஸ், பிரான்ஸ்)

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் GSP+ நன்மைகளை அதிகளவில் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகளை அதிகரிக்கும் அதன் முயற்சியில் ஐரோப்பாவில் இடம்பெற்ற பிரதான வர்த்தக கண்காட்சிக்காக 02 ஆவது முறையாகவும் இந்த வருடத்தில் கைத்தொழில் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. Lebourget கண்காட்சி நிலையத்தில் 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை இடம்பெற்ற இந்தக் கண்காட்சிக்காக இலங்கையின் 06 கம்பனிகள் பங்குபற்றின.

இதில் இலங்கை கருத்தரங்கொன்றை நடாத்துவதற்கு வாய்ப்பு கிட்டிய அதே வேளையில் இதில் GSP+ நன்மைகள் பற்றி எடுத்துக் காட்டி இரண்டு நாடுகளுக்குமிடையில் ஆடை கைத்தொழிலிலில் உள்ள

வாய்ப்புகள் பற்றி அறிமுக நிகழ்ச்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. மிகவும் உயர் தரத்தைச் சேர்ந்த மரபு ரீதியான உற்பத்திகள் சந்தைக்கான வேகம் இலங்கையில் நிலையம் ஆகியவற்றின் காரணமாக அபிவிருத்தி அடைந்த சந்தைகள் பலவற்றுக்கு உள்ள தொடர்புகள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

வளர்ந்து வருகின்ற மற்றும் நம்பகத்தன்மையுள்ள துறையொன்றாகிய வடிவமைப்பு நிர்மாணத் துறையை மேம்படுத்தும் சந்தர்ப்பமும் ஏற்றுமதி அபிவிருத்திற்காக அபிவிருத்திச் சபைக்கு கிடைத்தது. 2017 ஆம் ஆண்டு பரிஸ் நகரில் இடம்பெற்ற Apparel Sourcing நிகழ்வில் இந்தத் துறையின் மேம்பாடு ஆரம்பமாகியது. 2018 ஆம் ஆண்டில் ஆரம்ப கண்காட்சிக்கு இணையாக இடம்பெற்ற இலங்கை வடிவமைப்பு கண்காட்சியில் 2 வடிவமைப்பாளர்களுக்கு அவர்களின் உற்பத்திகளையும், வடிவமைப்பையும் அடையாளச் சின்னத்தையும், வர்த்தக நாமத்தையும் காட்சிப்படுத்தும் வாய்ப்புக் கிடைத்தது.

ஹொங்கொங் நவநாகரிக வடிவமைப்பு வாரத்தில் இடம்பெற்ற IFDS இல் இலங்கை நவநாகரீக வடிவமைப்பாளர்கள் மேம்பாடு

ஹொங்கொங் நவநாகரிக வடிவமைப்பு வாரத்திற்கு இணையாக 2018 ஜுலை மாதம் 09 ஆம் திகதி முதல் ஜுலை 12 ஆம் திகதி வரை இடம்பெற்ற சர்வதேச நவநாகரீக வடிவமைப்பு கண்காட்சியில் இலங்கையின் 04 வடிவமைப்பாளர்கள் அடையாள முத்திரையையும், வர்த்தக நாமத்தையும் காட்சிப்படுத்திய அதேவேளையில் அவர்களுக்கு நவநாகரீக காட்சியில் பங்குபற்றுவதற்கும் கண்காட்சியின் போது சந்தித்த வாங்குனர்களுடன் உறவுகளை கட்டியெழுப்பக் கூடிய வாய்ப்பும் கிடைத்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நவநாகரீக வடிவமைப்பாளர்களுக்கு பல்வேறு நாடுகளின் வாடிக்கையாளர்களும் சாத்தியமுள்ள ஆடை வர்த்தகர்களும் உயர் தரத்திலான கைப்பணி ஆடைகளை வழங்குபவர்களும் சந்திக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தது.



இதற்காக பங்குபற்றியதன் பெறுபேறாக இதற்காக பங்குபற்றியதன் பெறுபேறாக Pegion Island வர்த்தக குறிப் பெயருக்காக சில்லறை வாங்குனர்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்த வடிவமைப்பு வேளையில் செங்ஹய் சில்லறை வர்த்தக நிலையத்தில் ஒரு மாத காலத்திற்கு வர்த்தக நாமம் காட்சிப்படுத்தப்பட்டன.

இது செங்ஹய் போன்ற வளர்ந்து வரும் சந்தையொன்றில் இலங்கை வர்த்தக நாமத்திற்காக கிடைத்த உன்னத சந்தர்ப்பமாகும்.

உடல்நலச் சுற்றுலாக் கைத்தொழில்

அவுஸ்ரேலியாவின் சர்வதேச உடல்நல சுற்றுலா கைத்தொழிலின் நிபுணராகிய டாக்டர் பிரான்ஸ் லின்ஸருடன் உடல்நல சுகாதார கைத்தொழில் என்ற தலைப்பில் கருத்ததரங்கு ஒன்று 2018 பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதியன்று ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் நடாத்தப்பட்டது. ஆயர்வேத ஓய்வகம், ஆரோக்கிய நீருற்று நிலையங்கள், தனியார் வைத்தியசாலைகள், வெளிநாட்டு பயணக் கம்பனிகள் மற்றும் சுற்றுலாத் துறை ஆலோசகர்களுடன் இந்த கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள அரசாங்கத்தின் ஊழியர்களுடன் நிறுவனத்தின சுமார் 70 நபர்கள் இதற்காக பங்குபற்றினர். இந்த கருத்தரங்கின் போது

ஐரோப்பிய பிராந்தியத்தில் உடல்நல சுற்றுலா கைத்தொழில் போக்கு மற்றம் இலங்கை சேவை வழங்குனர்களுக்காக உள்ள வாய்ப்புகள் பற்றி விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது. உடல்நல சுற்றுலா கைத்தொழில் ஆரம்பத்தில் கவனம் செலுத்த வேண்டிய துறையாக அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளையில் இலங்கை தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்தின் ஒரு துறையாக உபாய திட்டமொன்றாக மேம்படுத்தப்பட்டது.

இலக்கு வைக்கப்பட்ட சந்தைகளில் இலங்கை உடல்நல சுற்றுலா கைத்தொழிலின் வர்த்தக நாமத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்றாக 03 வருடத்தின் செலவு ஆக்கக்கூறு/ நடைமுறைப்படுத்தல் திட்டம் ஆகியவற்றைக் கொண்ட விபரமான முன்மொழிவொன்று பேராசிரியர் லின்ஸர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

தேசிய ஏற்றுமதி உபாயத்திட்டத்திற்கு இணையாக இந்த கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஐக்கிய இராச்சியத்திலுள்ள உடல்நல கைத்தொழிலின் நிபுணர் மற்றும் "Wellness Escape" ஆரம்ப மற்றும் முகாமைத்துவ அமைப்பாளராகிய ஸ்டெல்லா .ீபோட்டி அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. 2018 ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதியன்று ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் திருமதி ஸ்டெல்லா .ீபோட்டி அவர்களின் பங்குபற்றுதலுடன் சர்வதேச உடல்நல சுற்றுலா பயணிகளுக்காக உற்பத்திகளை நிலைநிறுத்துதல் மற்றும் விற்பனை எனும் தலைப்பின் கீழ் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது.

மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் வெளிப்படுத்துகை சுற்றுலா மற்றும் வியாபார சீராக்கல் நிகழ்ச்சித் திட்டம்

இலத்திரனியல் மற்றும் மின்னியல் துறையில் ஏற்றுமதியாளர்கள் 06 பேருக்கு 2018 ஜூலை மாதம் 16 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் வெளிப்படுத்துகை சுற்றுலா மற்றும் வியாபார சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்குசெய்யப்ப்ட்ன. மலேசியா மற்றும் சிங்கப்பூரில் இடம்பெற்ற ஒன்றுக்கு ஒன்று வியாபார கலந்துரையாடலுக்காக முறையே மலேசியாவின் 47 இலத்திரனியல் மற்றும் மின்னியல் கம்பனிகளும் சிங்கப்பூரின் 77 கம்பனிகள் பங்குபற்றின. இலங்கை கம்பனிகளுக்காக 28 இற்கும் கூடுதலான வியாபார வாய்ப்புக்கள் 15 வியாபார கூட்டமைப்பு, தொழிநுட்ப மற்றும் புத்தாக்கங்களில் வர்த்தக வெளிப்படுத்துகை மற்றும் விளக்கமளித்தல் ஆகியவற்றுடன் இணைந்த கூட்டு வியாபார வாய்ப்புக்களும் கிடைத்தது.

இலங்கைக்கு வருகை தந்த தூதுக் குழுக்கள்

மலேசியா – மலேசியாவின் உற்பத்தியான பெடரேஷன் பேரவையைச் சேர்ந்த 11 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக் குழுவொன்று 2018 ஜனவரி மாதம் 23ஆம் திகதியன்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு வந்த அதேவேளையில் இரு நாடுகளுக்குமிடையில் சாத்தியத் தன்மையுள்ள வியாபாரம், கூட்டு வியாபாரம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வாய்ப்புக்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது. 3000 இற்கும் அதிகமான பல்வேறு அளவுகளைக் கொண்ட உற்பத்திகள் மற்றும் கைத்தொழில் சேவைக் கம்பனிகள் ஆகியவற்றை பிரதிநிதிப்படுத்துகின்ற தனியார் துறையின் பாரிய நிறுவனமாகிய மலேசிய உற்பத்தியாளர் பேரவை இந்த கைத்தொழிலின் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமாகும். உணவு மற்றும் குடிபானம், ஆடைக் கைத்தொழில், அலுவலக உபகரணங்கள், வள்ளங்கள் சேவை, பொதியிடல் மற்றும் கட்டடப் பொருட்கள் போன்ற துறைகளில் முன்னனி மலேசிய கம்பனிகளின் தூதுக் குழுவில் உள்ளடங்கியிருந்தன.

மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் 30 சங்கிலித் தொடர்களைக் கொண்ட வடிவமைப்பு கைத்தொழில் கம்பனியாகிய Style Apperal SDNBHT இலங்கையில் T-Shirt, பருத்தி துனியினாலான காற்சட்டை, ஜீன்ஸ் மற்றும் பை போன்ற உற்பத்திகளை பெற்றுக்கொள்வதற்கு விருப்பத்தை தெரிவித்தனர். இந்த கம்பனிக்கு இலங்கை ஆடைத் துறையிலுள்ள கம்பனி ஒன்றுடன் B2B கலந்துரையாடல் ஒழுங்குசெய்யப்பட்டது.

ஜப்பான் - JETRO இனால் ஒழுங்குசெய்யப்பட்ட ஜப்பானின் நகோனா பிரிபெக்ஷர் நகானோ ஊழியர் சங்கத்தின் வர்த்தக தூதுக் குழு ஒன்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்ட அதே வேளையில் அதில் 02 நாடுகளுக்குமிடையில் வர்த்தகத்தை மேம்படுத்தும் வாய்ப்புக்கள் மற்றும் சாத்தியத் தன்மைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. இந்த கலந்துரையாடலில்

இலத்திரனியல் மற்றும் மின்னியல் துறைகள், இறப்பர் சார்ந்த உற்பத்திகள், தேயிலை, தெங்கு சார்ந்த உற்பத்திகள் மற்றும் நிர்மாணம் மற்றும் ICT/ BEO போன்ற சேவைகள் குறித்தும் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது. தூதுக் குழு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகம் அதேபோன்று இலங்கை வர்த்தக சமூகத்துடன் கூட்டு வியாபாரங்களின் மூலம் தொழிநுட்ப பரிமாற்றங்கள் போன்ற முதலீட்டு வாய்ப்புகள் போன்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வியாபார்ங்களை ஆரம்பிப்பதற்கு விருப்பத்தை தெரிவித்தனர். B2B கலந்துரையாடல்களின் பின்னூட்டலாக குறிப்பு வாங்குனர்களினால் தொழிற்சாலைகளுக்கு சுற்றுலாக்களை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

தாய்லாந்து சென்னை தாய் வர்த்தக நிலையத்தில் ஒத்துழைப்புடன் இலங்கையில் சுற்றுலாவை மேற்கொண்ட தாய்லாந்து நாட்டில் 25 வியாபாரிகளினால் இலங்கையில் 52 உறுப்பினர்களுடன் 100 B2B கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன

பாகிஸ்தான் - பாகிஸ்தான் வர்த்தக கண்காட்சிக்காக இலங்கையில் பங்குபற்றுதல் மற்றும் வியாபாரம் சம்பந்தமாக 2017 ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் 2018 ஏப்ரல் மாதம் 26 மற்றும் 27 திகதிகளில் பாகிஸ்தானில் வர்த்தகத் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டது பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வர்த்தகத்தை அதிகபட்ச மட்டத்திற்கு கொண்டுசெல்வது குறித்து அவர்களின் கவனம் செலுத்தப்பட்டது கொழும்பிலும் மாத்தறையில் நடாத்தப்பட்ட இலங்கை - பாகிஸ்தான் வியாபாரப் பேரவை, வியாபார கருத்தரங்கு ஆகியவற்றுக்கு பங்குபற்றிய தூதுக் குழுவினால் அதன் பின்னர் இலங்கையின் ஏற்றுமதியாளர்களின் சந்திப்பதற்காக B2B அமர்வும் நடத்தப்பட்டது. B2B கலந்துரையாடல் இறுதியில் ஒரு பாகிஸ்தான் கம்பளியினால் இலங்கை கம்பனி ஒன்றின் ஊடாக புளி ஏற்றுமதிக்காக கட்டளை வழங்கப்பட்டுள்ள அதேவேளையில் இந்தக் கட்டளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

ஒரு பாகிஸ்தான் கம்பனியில் எதிர்கால வியாபார நடவடிக்கைகள் கவனத்தில் கொள்வதற்கு இலங்கையின் கம்பனி ஒன்றினால் சுத்தமான தேங்காய் எண்ணெய் மாதிரிகள் கோரப்பட்டுள்ளன. மற்றுமொரு பாகிஸ்தான் கம்பெனி அன்னாசி பழப்பாகு ஏற்றுமதியுடன் உடன் தொடர்புபட்டுள்ளது. அவர்களினால் இலங்கையில் குளிரூட்டி களஞ்சிய அறை ஒன்றையும் ஐஸ்கிரீம் தொழிற்சாலை ஒன்றையும் நிர்மாணிப்பதற்கான இலங்கை முதலீட்டுச் சபையிடம் கருத்திட்ட முன்மொழிவு ஒன்றை சமர்ப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மற்றொரு பாகிஸ்தான் கம்பெனி இலங்கையில் இரத்தின கற்கள் மற்றும் ஆபரண சந்தை ஆய்வுக்காக இலங்கையில் பங்குதாரர்களுடன் வெற்றிகரமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இலங்கையில் சுத்தமான தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்வது சம்பந்தமாகவும் அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக பாகிஸ்தானின் தேயிலை வாசனைத் திரவியங்கள் பழங்கள், கருவா மற்றும் கைப்பணி ஆபரண ஏற்றுமதியாளர்களுடன் தொடர்புகளை கட்டியெழுப்புவதற்காக இலங்கை கம்பனிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தென் கொரியா - 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இலங்கையின் 10 கம்பெனிகள் தென்கொரியாவில் மோட்டார் வாகன உதிரிபாக அவர்களுடன் B2B கலந்துரையாடல்களும் தொழிற்சாலைகளுக்கான சுற்றுலாவும் ஒழுங்கு செய்யப்பட்டன. தூதுக்குழு இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மோட்டார் வாகன உற்பத்தியாளர்கள் சங்கம், இலங்கை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் பவுண்டரி அபிவிருத்தி மற்றும் சேவை நிறுவனங்களுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. கலந்துரையாடலின் பெறுபேறாக இலங்கையில் கம்பெனி ஒன்றினால் கொரியாவில் வாங்குனர்களின் தேவைக்கு அமைவாக மேம்படுத்தப்பட்ட மாதிரிகள் அவர்களுக்கு அனுப்பப்பட்டன.

இலங்கையில் ஒழுங்கு செய்யப்பட்டு வர்த்தக கண்காட்சி

வள்ளங்களின் கண்காட்சி மற்றும் வள்ளங்களின் திருவிழா 2018

அபிவிருத்தி திறமுறை மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு, துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு, இலங்கை துறைமுக அதிகார சபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் வள்ளங்கள் தயாரிப்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் நிறுவனம் ஆகியவற்றினால் ஒழுங்கு செய்யப்பட்ட வள்ளங்களின் கண்காட்சி மற்றும் வள்ளங்களின் திருவிழா 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26, 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் காலி கோட்டையிலுள்ள

Galle Yacht Marina வில் நடாத்தத்தப்பட்டது. பிரதானமாக ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கடல்சார் சுற்றுலா கைத்தொழில் வினோதமான முறையில் வள்ளங்களை செலுத்துதல் கடற்பயணங்களை மேற்கொள்ளுதல் மற்றும் வள்ளங்களை தயாரித்தல் நாட்டிலுள்ள ஆற்றல்களை காட்சிப்படுத்துவதற்காக இலங்கையில் நடாத்தப்பட்ட முதலாவது வள்ளங்களின் திருவிழா இதுவாகும்.

இந்த கண்காட்சியில் 40 கண்காட்சி கூடங்களும் நீரில் செயற்படுகின்ற 15 காட்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. இந்த கண்காட்சி இந்தியா, ஐக்கிய அரபு அமீர் இராச்சியம், மாலைதீவு, ஸ்வீடன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் உட்பட 8000 இற்கும் அதிகமான பார்வையாளர்களை கவர்ந்துள்ளது. புருண்டி, அவுஸ்திரேலியா மற்றும் சுவீடன் ஆகியவற்றுடன் கட்டளைகளுக்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாலைதீவு, ஸ்வீடன், இத்தாலி, ஐக்கிய அரபு இராச்சியம், இந்தியா, போலந்து, பெல்ஜியம், பாகிஸ்தான், சிஷெல்ஸ், மொரிஷியஸ் போன்ற நாடுகளிலிருந்து கண்காட்சிக்காக இந்நாட்டுக்கு வாங்குனர் தூதுக்குழு ஒழுங்குசெய்யப்பட்ட அதேவேளையில், இலங்கையின் வள்ளங்கள் தயாரிப்பாளருடன் B2B கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. அவர்களிடமிருந்து நேர்மறையான விசாரணைகள் பலவற்றை பெற்றுக்கொண்ட அதேவேளையில், மீன்பிடி வள்ளங்கள் கட்டுமரங்கள் போன்ற வள்ளங்களுக்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புருண்டி குடியரசின் முதலாவது உப ஜனாதிபதி போக்குவரத்து, பொது வேலைகள், உபகரணங்கள் மற்றும் முன்றாம்நிலை முகாமைத்துவ அமைச்சர் அவர்கள் கௌரவ விருந்தினராக கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றினார். 12 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு ஒன்றின் மூலம் இலங்கையின் கடற்படை உட்பட இலங்கையின் வள்ளங்கள் தயாரிப்பு கம்பனியுடன் எதிர்கால பங்குடைமை வியாபாரத்திக்கான பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





வள்ளங்களின் கண்காட்சி மற்றும் வள்ளங்களின் திருவிழா 2018 இற்கு இணையாக இலங்கை கடல்சார் கைத்தொழில்கள் நிலையம் கடல்சார் சுற்றுலா கைதிகளுக்கான சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் எனும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 ஆம் திகதி அன்று காலியில் உள்ள எட்வின் லைன் ஹவுஸ் ஹோட்டலில் ஒழுங்கு செய்யப்பட்டது. கடல்சார் சுற்றுலா பயண இலக்கு மற்றும் வள்ளங்கள் தயாரிப்பு நிலையமாக இலங்கையை சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்வதனைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் இந்த மாநாட்டில் பிரதானமாக கடல்சார் மீன்பிடிக் கைத்தொழில் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இந்த மாநாட்டில் புகழ்பெற்ற சர்வதேச நிபுணராகிய ஐரோப்பிய வள்ளங்கள் கைத்தொழிலின் எம்எஸ். சன்ட்ரைன் டேவொஸ், இந்திய மற்றும் இலங்கை நட்புறவு பேரவையின் சீடெக்ஸின் டாக்டர் போஸ், போல்போட் பொதுச் செயலாளர் திரு. மைக்கல் பெக், ஐக்கிய ராஜ்யத்தின் சர்வதேச கடல்சார் நிபுணர் திரு. மைக் டர்ரட் மற்றும் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்ளாட்டு நிபுணர்களின் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

கொழும்பு பாதணி மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சி 2018

ஏற்றுமதி அபிவிருத்தி சபை, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு மற்றும் இலங்கை கைத்தொழில் சபை ஆகியவற்றுடன் இணைந்து இலங்கை பாதணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பாளர்களின்

சங்கத்தினால் 10 ஆவது முறையாகவும் ஒழுங்கு செய்யப்பட்ட பாதணி மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சி 2018 பிப்ரவரி மாதம் 02 ஆம் திகதி முதல் 04 ஆம் திகதி வரை கொழும்பில் நடாத்தப்பட்டது.

இந்த கண்காட்சி கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆக்கத்திறன் மற்றும் தொழில் நிபுணத்துவத்தை கொண்டுள்ள உள்நாட்டு திறமைகளை அடையாளம் காணும் சிறந்த மேடையாக அமைந்தது. கண்காட்சியில் பிரதான நோக்கம் சர்வதேசரீதியில் இலங்கையின் பாதணி மற்றும் தோல் பொருட்கள் பற்றிய உன்னத நற்பெயரைக் கட்டியெழுப்புவதாகும். இதன்போது விசேடமாக சிறிய மற்றும் நடுத்தர அளவு ஏற்றுமதியாளர்களுக்காக அவர்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

110 உள்நாட்டு கம்பெனியா 23 வெளிநாட்டு கம்பனிகளினாலும் 230 காட்சிக் கூடங்களில் அவர்களின் தயாரிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன. பாதணிகளை தயாரிக்கின்ற பெண் தொழில் முயற்சியாளர்களுக்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஆறு கண்காட்சி கூடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. 16000 பார்வையாளர்களை கவர்ந்த இந்த கண்காட்சி இடம்பெற்ற காலப்பகுதியில் ரூபா 50 மில்லியன் கூடுதலான பெறுமதியைக் கொண்ட விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தாலியின் மொடன்பெல்லே மற்றும் இந்தியன் லெதர் ஆகியவற்றின் ஊடகவியலாளர்கள் கண்காட்சிக்காக சுற்றுலாக்களை மேற்கொண்டனர். அது சம்பந்தமாக மொடன்பெல்லே மற்றும் இந்தியன் லெதர் ஆகிய சஞ்சிகைகளில் நிகழ்வுக்கு முன்னரான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சர்வதேச இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரண கண்காட்சி 2018

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை மற்றும் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் FACETS Sri Lanka 2018 கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்ட அதேவேளையில் 13 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆபரண தயாரிப்பார்கள் மருதானையிலுள்ள இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி பெலிஅத்த தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் கண்காட்சி கூடம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவு ஆபரண தயாரிப்பாளர்களின் வடிவமைப்புகளினதும் தயாரிப்புகளினதம் தரத்தை உயர்த்துவதற்காக கண்காட்சிக்கு முன்னர் 4 செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இதில் பங்குபற்றியவர்களுக்கு அதே இடத்தில் ரூபா 3.3 மில்லியன் பெறுமதியை கொண்ட விற்பனையும் அதேபோன்று ரூபா 4.0 மில்லியன் பெறுமதியை கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

5. ஏற்றுமதியாளர்களின் உலகளாவிய மதிப்பு சங்கிலியுடனும் உலகளாவிய தயாரிப்பு பரிமாற்ற வலையமைப்புகள் இணைத்தல்

பெல்ஜியம் மற்றும் ஜெர்மனி நாடுகளிலுள்ள செங்களி தயாரிப்பாளர்களுகாக தொழில்நுட்ப மற்றும் சந்தை வெளிப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம்

சர்வதேச சந்தைகளில் விசேடமாக ஐரோப்பிய ஒன்றியத்தில் சூழல் நட்பான உற்பத்திகளுக்கு அதிகரித்துவரும் கேள்வியை கவனத்திற்கொண்டு, ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் துணை கைத்தொழிலை சர்வதேச சந்தைகளில் மேம்படுத்தக்கூடிய கைத்தொழிலாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனால் செங்களி தயாரிப்புகளில் தரத்தை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் உற்பத்திகளையும் சந்தைகளையும் மேம்படுத்தும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

பெல்ஜியம் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் இலங்கை தூதுவராலயத்தின் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 2018 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை செங்கல் தயாரிப்பாளர்கள் தொழில்நுட்ப மற்றும் சந்தை வெளிப்படுத்திக் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பெல்ஜியம் நாட்டின் 03 முன்னணி செங்கல் தயாரிப்பு தொழிற்சாலைகளுக்கான விஜயங்கள் உட்பட இந்த நிகழ்ச்சி திட்டத்திற்காக செங்கல் தயாரிக்கும் 09 கம்பனிகள் பங்குபற்றிய அதேவேளையில் செங்களி தயாரிப்பாளர்கள் சங்கத்தையும் சந்தித்தனர். ஜெர்மனியின் கண்காட்சியை

பார்வையிடச் சென்ற தூதுக்குழு ஐரோப்பிய செங்கலி கைத்தொழில் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கிலும் பங்கு பற்றியது. கம்பனிக்காக விசேடமாக செங்கல் மற்றும் ஓட்டு கைத்தொழில் நவீன தொழில்நுட்பங்கள், புத்தாக்க தயாரிப்புகள், தன்னியக்க செயற்பாடுகள் மற்றும் ஐரோப்பிய இயந்திர தயாரிப்பாளர்களினால் மேம்படுத்தப்பட்ட புதிய இயந்திரங்கள் பற்றி முறையான வெளிப்படுத்துகையைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. இந்த விஜயத்தில் பங்குபற்றியதன் பெறுபேறாக ஒரு சில கம்பெனிகளினால் துளை உள்ள செங்கல் சூரிய செங்களி, ஓட்டுக் கூரைகள் ஒலித் தடை போன்ற புதிய உற்பத்திகள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் தயாரிப்பு கைத்தொழில்

எஸ்எஸ் ஜெர்மனி கம்பெனியின் உற்பத்தி அபிவிருத்தி நிபுணர் பேராசிரியர் பெற்றிக் கெலி அவர்களினால் 2018 பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரை உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் பங்குபற்றுர்களுக்கு சர்வதேச தேவைகளை அடையாளம் காண்பதற்கும் அவர்களின் உற்பத்தி செயல்முறையில் உற்பத்தி தரத்தில் மற்றும் தர நிர்ணயத்தில் விற்பனையில் மற்றும் விற்பனை பலவீனங்கள் ஆகியவற்றை அடையாளம் காணுவதற்கு வாய்ப்புக்கள் கிடைத்தன. பங்குபற்றினார்கள் அவர்களின் செயற்பாடு பற்றி விரிவான விளக்கத்தை பெற்றுக் கொள்வதற்கும் அவர்கள தயாரிக்கின்ற மோட்டார் வாகனங்களுக்கான துணை பாகங்களை வழங்குவதற்கு உள்ள ஒத்துழைப்பு பற்றி ஆராய்வதற்காக இந்நோவேஷன் வேலை தளத்திற்கும் விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

சாத்தியவள ஆய்வு மற்றும் முதலீட்டாளர் எதிர்பார்ப்பும் வள்ளங்கள் மற்றும் கப்பல்களை கட்டும் துறை

வள்ளங்களையும் கப்பல்களையும் தயாரித்தல் மற்றும் நீர்வழி அபிவிருத்தி ஆகியவற்றுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்தீர்ப்பதற்காக முதலீட்டு ஒத்துழைப்பு அறிக்கை ஒன்றும் சாத்தியவள ஆய்வு அறிக்கை ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர், ஜெர்மன் நெதர்லாந்து, மாலைதீவு தென்னாபிரிக்கா, மொரிசியஸ், சிஷெல்ஸ், தன்சானியா, மடகஸ்கார், கென்யா மற்றும் உகண்டா போன்ற நாடுகளிலுள்ள சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு அனுப்புவதற்காக முதலீட்டு ஒத்துழைப்பு அறிக்கை அந்த நாடுகளின் தூதரகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

6. சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை ஆகியவற்றினூடாக சந்தை அணுகலைக்கான வசதிகளை வழங்குதல்

பதப்படுத்தப்பட்ட உணவு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்பாடுகளை வினைத்திறனுடன் பயன்படுத்துதல்.

இந்தியா உலகில் துரிதமாக அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் ஒன்றாக அறியப்படுகின்றது. இந்தியாவில் தீர்வை வரியற்ற தடைகள் முறைமைகளில் உள்ள தாமதங்கள், அங்கீகாரங்கள் மற்றும் தடை நீக்கம் பிரச்சினைகள், இந்திய சந்தைகள் உடன் வர்த்தகத்தில் ஈடுபடும் போது தடைகளாக எடுத்துக்காட்ட முடியும். சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் தீர்வை வரிகளை குறைப்பதன் மூலம் சந்தைக்கான அணுகல் வழங்கப்பட்டுள்ள அதேவேளையில், மேலே காட்டப்பட்டுள்ள தீர்வை வரிஅல்லாத பிரச்சனைகளை தீர்ப்பதன் மூலம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள முழுமையான சாத்தியத் தன்மையை பெற்றுக்கொள்வதற்காக வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்த முடியும். இந்தியாவுக்கான ஏற்றுமதிகள் மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் பின்வரும் இரண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவில் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய அதிகாரசபையில் ஒத்துழைப்புடன் இலங்கையில் 03 ஆய்வுகூடங்கள், உணவு மற்றும் குடிபான வகைகளுக்காக இந்தியாவின் தரத்திற்கு அமைவாக

இணைக்கபாட்டினை பகுப்பாய்வு செய்வதற்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஏற்றுமதியாளர்களுக்கு இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டவாறு மாதிரி பரிசோதனைகளுக்காக இந்தியாவின் ஆய்வு கூடங்களுக்கு அனுப்புவதை தவிர்த்து மேற்குறிப்பிட்ட இலங்கை ஆய்வுக்கூடங்களில் இணக்கப்பாட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளும் வசதிகள் வழங்கப்படும்.

ஏற்றுமதி அபிவிருத்திசபையினால் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு இந்தியாவின் சந்தைகளில் முழுமையான சாத்தியத் தன்மையை பெற்றுக்கொள்வதற்காக வசதிகளை வழங்கி இந்தியாவின் உணவு ஒழுங்கு முறை பற்றிய ஏற்றுமதியாளர்களுக்கும் ஆர்வமுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கும் விளக்கமளிப்பதற்காக இந்தியாவின் உணவு மற்றும் குளிர்பான வகை ஏற்றுமதிக்கான ஒழுங்கு விதிகள் மற்றும் தடைநீக்க செயல்முறைகள் என்ற தலைப்பில் விளக்கமளிக்கும் செயலமர்வு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

வாசனை திரவியங்கள் மற்றும் செறிவூட்டும் பொருட்களுக்காக ஜப்பானில் சந்தைகளைப் பன்முகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

பாரம்பரிய வாசனை திரவிய சந்தையிலிருந்து விலகிச் சென்று ஆசியாவில் அதிகூடிய பெறுமதியைக் கொண்டுள்ள சந்தைகளை பன்முகப்படுத்துவதற்காக நான்கு கம்பனிகளில் ஒத்துழைப்புடன் 2018 ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை ஜப்பானில் வாசனை திரவியங்கள் மற்றும் செறிவூட்டும் பொருட்களைப் பன்முகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

பங்குபற்றுனர்கள் மூன்று தொழிற்சாலைகள், ஆய்வுக்கூடம் மற்றும் அபிவிருத்தி வசதிகள் ஆகியவற்றுக்கு விஜயம் செய்தனர். 55 ஜப்பான் கம்பனிகளுடன் இடம்பெற்ற B2B கலந்துரையாடல்களில் பெறுபேறாக பங்குபற்றிய கம்பனிகளின் தொழிற்சாலைகளை பார்வையிடுவதற்காக 2 ஜப்பான் கம்பனிகள் இலங்கைக்கு விஜயம் செய்தன. ஐ.அ.டொலர் 10000 பெறுமதியைக் கொண்ட கட்டளைகள் சம்பந்தமான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

சீனாவின் இன்டர்நேஷனல் இம்போர்ட் எக்ஸ்போ

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 29 கம்பெனியுடன் 2018 அக்டோபர் மாதம் 5 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை ஷங்காய் நகரில் இடம்பெற்ற சீனாவின் இன்டர்நேஷனல் இன்போ முதலாவது கண்காட்சிக்காக இலங்கையின் பங்குபற்றுதல் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த கண்காட்சியின் மூலம் பங்குபற்றிய கம்பனிகளுக்கு சீனாவில் சந்தைகளில் நுழையும் சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ள அதேவேளையில், தற்போது காணப்படுகின்ற சந்தைகளில் தொடர்பு மேலும் பலப்படுத்தப்பட்டது. பங்குபற்றுனர் கேள்விகளுக்கான சந்தைகள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் போட்டித்தன்மை அடையாளம் காணப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் விநியோகஸ்தர்கள் ஆகியவற்றை பரீட்சித்து பார்க்கக்கூடியதாக இருந்த அதேவேளையில், அவர்களில் சிலர் சந்தைக்கான புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தியுள்ளனர். பங்குபற்றுனர் ஆரம்பத்தில் ஐ.அ.டொலர் 251,290 பெறுமதியை கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகள் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த அதேவேளையில் ஐ.அ.டொலர் 15,852,815 பெறுமதியை கொண்ட கட்டளைகள் பற்றி கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அதேபோன்று பல கம்பனிகளுக்கு பிரதிநிதிகளை சேமிக்க கூடியதாக இருந்ததுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் செய்து கொள்ளக் கூடியதாகவும் இருந்தது.

7. ஆசிய நாடுகளை இலக்காக கொண்ட சந்தை அணுகுகை



ICT/ BPM

ஜெட்ரோ, ஜெசா மற்றும் டோக்கியோவில் உள்ள இலங்கை தூதுவராலயத்தின் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் 10 கம்பனிகளுக்காக 2018 மே மாதம் 9 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை ஜப்பானில் தகவல்

தொழிநுட்ப வாரத்தில் இந்த சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஜப்பான் சந்தைகளுக்காக 04 கம்பனிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில், 06 கம்பனிகள் ஏற்கனவே ஜப்பான் சந்தைகளில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. நிகழ்ச்சித்திட்டத்தினுள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பெறுமதி ஐ.அ.டொலர் 500,000 அளவை பெற்றிருந்தது. மேலும் உடன்படிக்கைகள் சம்பந்தமாக தற்போது கலந்துறையாடப்பட்டு வருகின்ற அதேவேளையில், அடுத்து வரும் 3 முதல் 12 மாதங்களில் ஐ.அ.டொலர் 1,000,000 பெறுமதியை கொண்ட உண்மைான வியாபாரமாக மாற்றவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அதேபோன்று மேலும் ஜப்பானில் வியாபாரத்தை விரிவுபடுத்துதல் ஜப்பானில் புதிய வியாபார வாய்ப்புக்களை கண்டறிதல், தெற்கு ஆசிய பிராந்தியத்தில் உள்ள அடையாளத்தை வலுவூட்டுதல் போன்ற கம்பனிகளின் எதிர்ப்பார்ப்பு பெறுபேறுகளும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக வெற்றிகரமாக அடையப்பெற்றுள்ளது. ஏற்றுமதியாளர்கள் 2000 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக கண்காட்சிகளுக்கு பங்குபற்றுவதற்காக நான்கு கம்பனிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒரு கம்பனி அவர்களின் புதிய உற்பத்தி 'My med' ஜப்பான சந்தைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளையில் டோக்கியோவில் அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. மற்றுமொரு கம்பனி தூர பிரதேசங்களில் கண்காட்சிகளுக்காக வர்சுவல் ரியலிட்டி இடுகையை மேம்படுத்துவதற்காக 3.2 மில்லியன் யென்கள் பெறுமதியை கொண்ட உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ள அதேவேளையில் மற்றுமொரு கம்பனி டிஜிடல் விற்பனை திர்வு உற்ப்பத்தி செய்வதற்காக ஜப்பானுடன் 350,000 யென் பெறுமதியை கொண்ட உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடக் கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

இலங்கை இறப்பர் கையுறை உற்ப்பத்தியாளர்கள் ஏற்றுமதியாளர்களுக்காக இந்தியாவில் B2B கலந்துறையாடல் நிகழ்ச்சித்திட்டம்

புதுடில்லியில் இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் உதவியுடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் இந்தியாவில் விற்பனை ஆலோசனை கம்பனி ஒன்றின் சேவையை பெற்று சந்தை வாய்ப்புக்களை ஆராய்வதற்காகவும் விசேடமாக வட இந்தியாவில் சாத்திய தன்மையுள்ள வாங்குனர்களுடன் நேரடி உறவுகளைக் கட்டியெழுப்புவதற்காக இலங்கை இறப்பர் கையுறை உற்ப்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் 2018 ஆம் அண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை B2B கலந்துறையாடல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக இலங்கையின் இரண்டு கம்பனிகள் பங்குபற்றிய அதேவேளையில் வாங்குனர் கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் இடையே இந்தியாவில் பிரசித்தி பெற்ற வைத்தியசாலை வலையமைப்பாகில் எம்.எஸ் மெடென்டா இற்கான சுற்றலாவும் ஒழுங்கு செய்யப்பட்டது.

ஒரு கம்பனிக்காக கைத்தொழில் கையுறைக்காக ஐ.அ.டொலர் 28,000 உறுதிப்படுத்தப்பட்ட கட்டளை கிடைக்கப்பெற்றள்ள அதேவேளையில், அவர்களினால் என்.பி.ஆர்/ இறப்பர் கையுறைக்காக மேலும் 4 வாடிக்கையாளர்களுடன் கட்டளைகள் பற்றிய இறுதி தீர்மானத்தை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் உள்ள கட்டளைகள் சம்பந்தமாக பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஏனைய கம்பனி கையுறை மாதிரியை அனுப்பும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது. மேலும் வாங்குனர்களினால் கூடிய விலை மற்றும் குறைந்த விலைப் பொருட்களுக்குள்ள விசேட கையுறைகளை கோரியுள்ளார்.

சீனாவில் சைனாப்லாஸ் 2018 நிகழ்வுக்கு இணையாக பிளாஸ்டிக் உற்பத்தியாளர்களுக்கான தொழிநுட்ப வெளிப்படுத்துகை கற்கை சுற்றுலா

2018 ஏப்ரல் மாதம் 24 அம் திகதி முதல் 27 அம் திகதி வரை சைனாபிளாஸ் 2018 நிகழ்வுக்கு இணையாக இலங்கையில் பிளாஸ்டிக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக 10 ஏற்றுமதியாளர்களின் பங்குபற்றுதல்களுடன் தொழிநுட்ப வெளிப்படுத்துகை கற்கை சுற்றுலா ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

சீனாவின் செங்ஹை தேசிய கருத்தரங்கு மற்றும் கண்காட்சி நிலையத்தில் இடமபெற்ற சைனாபிளாஸ் 2018 கண்காட்சியை பார்வையிடுவதற்காகவும் பிளாஸ்டிக் தொழிற்சாலை சுற்றுலா மற்றும் இயந்திர வழங்குனர்களை சந்திப்பது இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்கியிருந்தது. உதாரணமாக சென் சென்ஹி இடம்பெற்ற M/s Tonva Plastic Machine Factory, M/s Nantong Huasheng Plastic

products Co. Ltd. மற்றும் சீனாவில் ருஇயான் பிரதேசத்தில் இடம்பெற்ற M/s Ruian Chang Hornng Machinery.

நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்குபற்றிய இரண்டு கம்பனிகள் ஐ அ டொலர் 58000 பெறுமதியை கொண்ட 60 L Blow Moulding Machine இயந்திரம் மற்றும் உயர் தொழிநுட்பத்தை கொண்ட 6 கலர் flexo இயந்திரத்திற்காக கட்டளைகளை சமர்ப்பித்துள்ளனர்.

பங்குபற்றுனர்களுக்கு நவீன இயந்திரங்கள், நவீன தொழிநுட்பங்கள், புத்தாக்க தயாரிப்புகள், உயிர் பிளாஸ்டிக் பொருட்கள், இரசாயன பொருட்கள், புதிய வழங்குனர்கள், பிளாஸ்டிக் தயாரிப்புக்கான நவீன தரச்சிறப்பை கொண்டதும் பரிசிலனை முறைமைகள் பற்றிய அறிவும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இறப்பர் பால் உற்பத்தியாளர்களுக்கான ஏற்றமதியாளர்களுக்கான மலேசியாவில் தொழிநுட்ப பயிற்சி மற்றும் வெளிப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம்.

இத்துறையின் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும், சர்வதேச சந்தையில் இறப்பர் பால் தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகள் பற்றிய அறிவைப் பெறுவதையும் கருத்தில் கொண்டு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மலேசியாவில் இறப்பர் சபையின் கீழுள்ள மலேசியாவின் அகாடமி ஒப் ஹெவியா மலேசியாவில் 2018 ஆகஸ்ட் 27 முதல் 30 வரை இறப்பர் பால் தயாரிப்புத் துறைகளுக்கான தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றை ஏற்பாடு செய்தது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்கு 12 பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. பங்குபற்றுநர்கள் இறப்பர் பால் தொழில்நுட்பம், இறப்பர் பால் உற்பத்திக்கான நானோ பொருள் பயன்பாடுகள், சிறப்பு திசு, உடல்நலம் தொடர்பான பிரச்சினைகள், இறப்பர் பால் நூல்கள் மற்றும் படிகமயமாக்கல், இறப்பர் பால் நிறப்பூச்சு மற்றும் பசைகள், பதப்படுத்துதல் மற்றும் உற்பத்தியில் கழிவு முகாமைத்துவம், செயற்கை மரப்பால், நுரை உற்பத்தி ஆகியவற்றைப் பற்றி கற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்ததுடன் அதில் ஆய்வுகூடங்களுக்கான விஜயமும் அமைந்திருந்தது.



பங்குபற்றியதன் விளைவாக, கம்பனிகள் புதிய தயாரிப்புகள் மற்றும் தயாரிப்பு தழுவலில் முதலீடு செய்வதற்கான சாத்தியத்தன்மையை ஆராய்ந்து வருகின்றன.

பேங்கொக் இரத்தினக் கல் மற்றும் ஆபரணங்கள் கண்காட்சி - 2018

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் தாய்லாந்தின் சர்வதேச வர்த்தக மேம்பாட்டுத் துறையுடன் இணைந்து 2018 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக ஆறு (6) ஏற்றுமதியாளர்களின் பங்களிப்புடன் இலங்கை பெவிலியன் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது.

இந்த கண்காட்சியில் பரந்த அளவிலான இயற்கை இரத்தினக் கற்களை, குறிப்பாக நீல மாணிக்கக் கற்களைக் காட்சிப்படுத்தியதன் மூலம் பங்கேற்பு கம்பனிகளினால் கைத்தொழிலின் திறன்களை வெளிப்படுத்த முடிந்தது.

உருவாக்கப்பட்ட மொத்த வியாபாரம் சுமார் 300,000 அமெரிக்க டொலராக இருந்த அதேவேளையில், ஒரு பங்குபற்றுநர் ஒரு முன்னணி ஹாங்காங் நகை உற்பத்தியாளரிடமிருந்து ரெயின்போ லைன் சபையர்ஸுக்கு 8,000/- டொலர் பெறுமதியான தொடர்ச்சியான கட்டளையைப் பெற்றார்.

8. GSP+ சலுகையில் ஊடாக அதிகபட்ச நன்மைகளை பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம்

பாதணி உற்பத்தியாளர்களுக்கான சந்தை வெளிப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டம்

2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட உற்பத்தியை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னூட்டலாக தெரிவு செய்யப்பட்ட நான்கு உற்பத்தியாளர்களின் பங்குபற்றுதலுடன் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இத்தாலியில் சந்தைகளுக்கான வெளிப்படுத்துகை நிகழ்ச்சித் திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. M/s Style Modainpelle எகடமியில் அலங்கார வடிவமைப்பு மற்றும் அதன் போக்குகள் பற்றிய அரை நாள் கருத்தரங்கு மற்றும் அவர்களினால் ஐரோப்பிய சந்தைகளுக்கான உற்பத்திகளில் உள்ள தகைமை பற்றி அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக சந்தைப்படுத்தல் நிபுணர்களுடன் தனித்தனியாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன
பங்குபற்றுனர்களுக்கு மிலான் நகரின் கண்காட்சிக்கான விஜயம் மற்றும் மிலான் சந்தை மாவட்டத்திலுள்ள சப்பாத்து உற்பத்திக்கான சந்தைகளை மதிப்பீடு செய்யும் ஒப்படைப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில், அவர்களுக்கு உயர் தொழில்நுட்பம் வடிவமைப்பு சப்பாத்து வடிவமைப்பு நிர்மாணம் மற்றும் தேவையான தர நிர்ணயங்களை பெற்றுக்கொள்வதற்காக குறிப்பிடத்தக்க போக்கு பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. பங்குபற்றுனர்களுக்கு குறைந்தபட்ச அளவில் இயந்திரங்களையும் மனித வளங்களையும் பயன்படுத்தி உயர் தரத்திலான மற்றும் வினைத்திறன் தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்வது எவ்வாறு என்பது பற்றிய புரிந்துணர்வை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன 2,000 புதிய ஏற்றுமதியாளர் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மகளிர் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் கீழ் பதிவுசெய்துள்ள தெரிவு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவு பதினைந்து உற்பத்தியாளர்களை உள்ளடக்கிய குழு ஒன்றுக்கு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதியன்று ஏற்றுமதி சபையில் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பங்குபற்றியவர்களுடன் அறிவை பரிமாறிக்கொள்ளும் அமர்வொன்று நடாத்தப்பட்டது.

நெதர்லாந்து பெல்ஜியம் மற்றும் லக்சம்பர்க் நோக்கி நாட்டில் இருந்து வெளியில் சென்ற தூது குழுக்கள்

ஆடைத் துறை, கடல் உணவு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், மருந்து, தாவர உற்பத்தி, உடல் நல சுகாதார கைத்தொழில் போன்ற துறைகளில் உள்ள பத்தொன்பது கம்பெனிகள் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக பங்குபற்றின. இலங்கை கம்பெனிகளுக்கு நெதர்லாந்து பெல்ஜியம் மற்றும் லக்சம்பர்க் ஆகிய இடங்களில் அறுபது (60) B2B கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. ஆடைத் துறையில் உள்ள கம்பெனிகள் உலகம் முழுவதும் ஆடைகளுக்கான நிரந்தர கண்காட்சி மற்றும் வியாபாரத்தில் இருந்து வியாபாரம் வரையான மேடையாகிய சுற்றுலாவை மேற்கொண்டது. நிறுவனத்தில் ஆல் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழி ஒன்றுக்கு அமைவாக இலங்கையின் 5 ஆடை கம்பெனிகளின் மூலம் இலங்கையின் ஆடைகளை காட்சி படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் 1500 சதுர அடி கொண்ட நிரந்தரம் இடத்திற்கு விண்ணப்பித்துள்ளது.

லக்சம்பர்க் நகரில் நடைபெற்ற வர்த்தக கலந்துரையாடலின் பின்னர் ஐரோப்பியாவில் நிதிச் சேவை கைத்தொழில்களுக்காக தீர்வுகளை மேம்படுத்தும் பிரதான நிறுவனமாக லக்சம்பர்க் அமைந்துள்ள நிறுவனத்தில் இலங்கையின் அலுவலகம் ஒன்றை திறப்பதற்கு இரண்டாவது முறையாகவும் அந்நாட்டுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது

அவர்களினால் உலகிற்கு இலத்திரனியல் கொடுப்பனவு பிணை வழங்கும் பிரதான நிறுவனமாகிய பெல்ஜியம் நிறுவனத்துடன் நாட்டின் எல்லையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் பங்குடமை ஒப்பந்தத்திலும் இணைந்து கொண்டுள்ளனர்

அண்ணளவாக ஐ.அ.டொலர் 1.2 மில்லியன் பெறுமதியை கொண்ட கடலுணவு துறையில் ஐந்து (05) கட்டளைகள் ஆடைத் துறையில் ஆறு (06) கட்டளைகள் உடல்நல சுகாதாரத்துறையில் நான்கு (04) கட்டளைகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படுகின்றன.

உலக ஏற்றுமதி அபிவிருத்திப் பேரவை

ஆபிரிக்கப் பிராந்தியத்தில் இலங்கையில் ஏற்றுமதிக்காக உள்ள வாய்ப்புகள் பற்றி தேடிப் பார்ப்பன் முக்கியத்துவத்தை கவனத்திற்கொண்டு ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை செம்பியா நாட்டின் லுசாக்கா நகரில் இடம்பெற்ற உலக ஏற்றுமதி அபிவிருத்தி பேரவையில் கலந்து கொள்வதற்காக தனியார் துறையில் உள்ள 6 ஏற்றுமதிக் கம்பனிகளைக் கொண்ட வர்த்தக தூதுக்குழு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ள அதேவேளையில், 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05 ஆம் திகதி முதல் 07 ஆம் திகதி வரை கென்யாவில் வியாபார கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

வியாபார பேரவையின் பின்னர் கென்யாவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் பங்குடமையுடன் கென்யாவின் வர்த்தக மற்றும் கைத்தொழில் பேரவை மற்றும் கென்யாவின் உற்பத்தியாளர்களின் சங்கம் ஆகியவற்றின் மூலம் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று இலங்கை பொது குறுக்காக B2B கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதிபலனாக இனிப்பு பண்டங்கள் பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் தெங்கு தயாரிப்பு துறைகளுக்கு 05 கட்டளைகள் கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுகின்றன. பொறியியல் துறையினதும் ஆரோக்கிய சுற்றுலாத்துறையினதும் 02 கூட்டு வியாபாரங்களை ஆரம்பிப்பதற்காக கலந்துரையாடப்பட்டு வருகின்றன.

தூதுக்குழு செப்டம்பர் மாதம் 10 - 12 ஆம் திகதிவரை செம்பியாவில் நடைபெற்ற உலக ஏற்றுமதி அபிவிருத்தி பேரவை மற்றும் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றால் செய்யப்பட்ட B2B கலந்துரையாடல்கள் பங்கு பற்றியது.

9. இலங்கைக்கு வர்த்தகக்குறிப் பெயரை இடுதலும் இலங்கையின் உற்பத்திகளை உலகளாவியரீதியில் நிலைநிறுத்துதலும்

வாசனை திரவியங்களுக்கு வர்த்தக குறிப் பெயரை இடுதல்

இலங்கையில் வாசனை திரவியங்களை சர்வதேச சந்தையில் நிலைநிறுத்துவதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் இலங்கையின் வாசனை திரவியங்களை விசேடமாக கருவா மற்றும் மிளகு ஆகியவற்றுக்காக வர்த்தக நாமம் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்னணி வர்த்தக நாமம் ஆலோசனை கம்பெனி ஒன்றின் உதவியுடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் வர்த்தக நாமம் பெயரிடும் உபாயத்திட்டம் தொடர்பாடல் பரிந்துரைகள் மற்றும் செயல்திட்டம் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த பணியை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்காக கருத்திட்டம் பற்றிய ஆலோசனை வழங்குவதற்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் உள்ள அங்கத்தவர்களை கொண்ட செயற்பாட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அங்கத்தவர்கள் ஏற்றுமதி விவசாய திணைக்களம், ஆரம்ப கைத்தொழில் அமைச்சு, வாசனை திரவியச் சபை, வாசனை திரவியங்கள் மற்றும் அதற்கு சமனான தயாரிப்பு உற்பத்தி செய்பவர்களின் வர்த்தகர்களினதும் சங்கம், இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் கருவா பயிற்சி அகடமி பெருந்தோட்ட கைத்தொழில் போன்ற நிறுவனங்களையும் செயல்முறைகளையும் ஏற்றுமதியாளர்களையும் உள்ளடக்கியுள்ளது.

தொடர்புடைய பங்குதாரர்களுடனும் செயற்பாட்டு குழுவின் அங்கத்தவர்களுடனும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் பல செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. உலகின் பிரசித்திபெற்ற வர்த்தக நாமத்தைப் பெயரிடும் கம்பெனியாகிய நிறுவனத்தின் உபாயத்திட்டப் பணிப்பாளர் திரு. குய்டோ வான் அவர்களினால் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் நடாத்தப்பட்ட வர்த்தக நாமத்தை நிலைநிறுத்தும் செயலமர்வும் இதில் உள்ளடங்கியுள்ளது.

அதன் பிரகாரம் அரசாங்க மற்றும் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் வாசனை திரவியங்களுக்கு வர்த்தக நாமத்தைப் பெயரிடுதல் நிறைவு செய்யப்பட்டது. இலங்கையின் வாசனைத் திரவிய வர்த்தக நாமம் என்ற பொது அடையாளம் மற்றும் என்பவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை கருவாவுக்கான புவியியல் குறிகாட்டி

இலங்கையின் கருவாவுக்கு ஐரோப்பிய சங்கத்தின் புவியியல் குறிகாட்டியைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபை கருவா கைத்தொழில் பங்குதாரர்களுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஏற்றுமதி அபிவிருத்தி சபை UNIDO கூட்டமைப்புடன் இலங்கை கருவாவின் புவியியல் குறிகாட்டிக்கு விண்ணப்பிக்கும் செயல்முறை நடைமுறைப் படுத்துவதற்கும் கண்டுபிடிக்கும் முறையை உறுதிப்படுத்தும் தொகுதி ஒன்றை ஏற்படுத்துவதற்கும் வழிகாட்டல்களை பெற்றுக்கொள்வதற்காக சர்வதேச நிபுணர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் அடையாளம் காணப்பட்ட உற்பத்திகள் அதாவது வெட்டப்பட்ட மேல்தோல், மா, கருவா இலை எண்ணெய் மற்றும் கருவாப் பட்டை எண்ணெய் ஆகியவற்றுக்காக ஐரோப்பிய சங்கத்தின் புவியியல் குறிகாட்டியைப் (GI) பெற்றுக்கொள்ளும் தொழில்நுட்பத் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசாங்க மற்றும் தனியார் துறையின் கருவா பங்குதாரர்களுடன் இலங்கை கருவாவுக்கான குறிப்புக்களை தயாரிக்கும் பணியும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் மூலம் காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் உள்ள பயிர்ச்செய்கையாளர்கள், உற்பத்தியாளர்கள் வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் உட்பட கருவாக் கைத்தொழில் பங்குதாரர்களுக்கு கருவா குறித்தொதுக்கல்களில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்தொதுக்கல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அங்கத்தவர்களை மேற்பார்வை செய்யும் உள்ளக நிர்வாகம் பொறிமுறையொன்றை நடைமுறை படுத்துகின்ற சம்பாதிப்பதற்காக உதவி வழங்கியது.

மேலே குறிப்பிடப்பட்ட கருவாவை செயல்முறைப்படுத்தும் 05 மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மற்றும் அவற்றிலிருந்து உருவாகிய சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் கருவா புவியியல் குறிகாட்டியைகளில் (GI) குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆரம்ப குறித்தொதுக்கல்களைப் பேணி வருகின்ற கருவா உற்பத்தியாளர்கள் மற்றும் குறியீடுகளை பயன்படுத்தி அவர்களை உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான தகைமைகளை பெற்றுக்கொள்வார்கள்.

இலத்திரனியல் மற்றும் மின்னியல் துறை

இலங்கை வெளிநாட்டுதூதுக் குழுக்கள் மற்றும் சமூக ஊடகங்களின் ஊடாக உலகளாவிய ரீதியில் இலத்திரனியல் மற்றும் மின்னியல் துறையை மேம்படுத்துவதற்காக கேள்வி, பார்வை டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரச்சார நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பரப்பப்பட்டது. அதனை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் இணையதளம் மற்றும் யூடியூப் என்பவற்றினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

ICT/BPM

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்புடன் அதன் பங்குதாரர்களுடன் 2015 பிப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அன்று BMICH இல் "IOI – Island of Ingenuity, Sri Lanka Knowledge Solutions" எனும் இலங்கையின் துறையில் தேசிய சிறப்புப்பெயர் ஆரம்பித்து வைக்கப்பட்டது ஜப்பான் நிதியத்திடம் இருந்து கிடைத்த தொழில்நுட்ப உதவியும் நிதியும் பயன்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில் கம்பனி ஆலோசகராக சேவையாற்றியது.

அதிகூடிய பெறுமதியை சேர்த்தல் மற்றும் உலகளாவிய ரீதியில் கைத்தொழில் அதிஉன்னத நிலையை இலங்கையை நிலைப்படுத்தும் தேவைப்பாட்டுக்காக கைத்தொழிலுக்காக வலுவான சிறப்புப்பெயர் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் இதனை ஆரம்பிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

10. வர்த்தகத்திற்காக வசதியளித்தல் மற்றும்வர்த்தகத் தகவல்கள்

ஏற்றுமதியாளர்களின் பேரவை

அபிவிருத்தித் திறமுறை மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் ஒத்துழைப்புடன் 2018 இல் நான்கு (4) ஏற்றுமதியாளர்களின் பேரவை நடாத்தப்பட்டது. இந்த ஏற்றுமதியாளர்களின் பேரவைகள் 2018 ஏப்ரல் மாதம் 05 ஜூன் மாதம் 22 ஆகஸ்ட் மாதம் 14 ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

இந்தப் பேரவையின் மூலம் தொழிற்சாலைகளில் குறுக்குவெட்டு பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏற்றுமதியாளர்களுக்கு தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களுடன் இணைந்து வர்த்தகம் தொடர்பான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு மேடையை வழங்கப்படுகின்றது.

இடம்பெற்ற பேரவைக்கு தொடர்புடைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையில் பிரதிநிதிகள் வருகை தந்திருந்த அதேவேளையில் இதன்போது ஏற்றுமதி சார்ந்த செயற்பாட்டு மற்றும் கொள்கை ரீதியான விடயங்கள் வரையான பிரச்சனைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டது.

இலங்கையில் டயர் கைத்தொழிலுக்காக உற்பத்திப் புத்தாக்கம் தொழில்நுட்பம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு

இலங்கை ரப்பர் தயாரிப்பு உற்பத்தியாளர்களினதும் ஏற்றுமதியாளர்களினதும் சங்கம் மற்றும் இலங்கை பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் நிறுவனம் ஆகியவற்றினதும் ஒத்துழைப்புடன் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை 2018 ஜூலை மாதம் 13 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை இரண்டு நாள் (02) செயலமர்வு ஒன்றை ஒழுங்கு செய்தது. முதலாவது ஒத்துழைப்பு டயர் செயலமர்வாகிய இது இலங்கையில் பிரதான உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கம்பெனிகளின் தொழில்நுட்பத் துறையில் உள்ள 100 இற்கும் மேற்பட்ட நபர்களின் பங்குபற்றுதலுடன் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. உற்பத்தி, புத்தாக்கம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி போன்ற துறைகள் பற்றிய இந்த செயலமர்வில் தொழில்நுட்ப நிபுணர்களின் சேவையை பெற்றுக்கொள்வதன் மூலம் டயர் உற்பத்தியாளர்களின் ஏற்றுமதியாளர்களின் அறிவை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.
டயர் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களில் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் சர்வதேச டயர் கைத்தொழில் புத்தம் புதிய உற்பத்திகளை மேம்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சி சம்பந்தமான வெளிப்பாட்டை மேம்படுத்துவதும் இந்த செயலமர்வின் நோக்கமாகும்.



இதன்போது பங்குபற்றினர் களுக்கு குநுயுளு போன்ற நவீன கருவிகளை மிகவும் விரிவாக பயன்படுத்துவதற்கு இறப்பர் பதனிடல் மற்றும் மற்றும் கலக்கும் கலக்கும் தொழில்நுட்பம் கரைசல் வடிவமைப்பு அபிவிருத்தி டயர் மற்றும் டயர் அல்லாத பிரயோகங்களை தயாரிக்கும் பொருட்களாக பல்வேறு பொலிமர்களைப் பயன்படுத்துதல், அழுத்தச் செறிவுகளையும் மேலதிகமான சிதைவுகளையும் தனிக்கும் வடிவமைப்புகள், கைத்தொழிலுக்கான விடையக் கற்கைகள் சிறந்த நடைமுறைகள் மற்றும் தேவையான ஆரம்ப ஊக்குவிப்புகள் ஆகியவை தொடர்பான அறிவை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

வளர்ந்து வரும் கைபணியாளர்களுக்கான ஷில்ப சவியர் தொழில் முயற்சி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

தெரிவுசெய்யப்பட்ட 27 கைப்பணியாளர்களின் திறன்களை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தேசிய கைப்பணிகள் பேரவை ஒத்துழைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் சில்ப சவிய தொழில் முயற்சி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது கைப்பணியாளர்களை மதிப்பீடு செய்தல், வடிவமைப்பு இடுகை, வடிவமைப்பு மதிப்பீடு அதேபோன்று இறுதியில் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலையீடு இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடங்கியுள்ளது. விருத்திசெய்யப்பட்டு தயாரிப்புக்காக பரிசோதனை சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடாத்தப்பட்ட அதேவேளையில் இறுதியான கண்காட்சி காலி கலாச்சார விழாவுக்கு இணையாக 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் காலியில் நடாத்தப்படும்.

தேசிய சேதன கட்டுப்பாட்டு அலகு

வேளாண்மை பொதியிடல் சான்றுப்படுத்துதல் அடையாளச் சின்னத்தை இடுதல் மற்றும் விற்பனை போன்ற சகல சேதனம் சார்ந்த நடவடிக்கைகளை உரிய விதத்தில் கண்காணித்தல் கட்டுப்படுத்துதல் மூலம் இலங்கையில் சேதன தயாரிப்புகளில் நம்பாகத் தன்மையையும் நற்பெயரையும் பாதுகாப்பதற்காக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் தேசிய சேதன கட்டுப்பாட்டில் அலகு தாபிக்கப்பட்டுள்ளது.

தேசிய சேதன கட்டுப்பாட்டு அலகின் பொறுப்பு மற்றும் சேதன விவசாயம் கைத்தொழில் உற்பத்திக்காக சர்வதேச சந்தையில் நோக்கு பற்றிய அறிவை வழங்குவதற்காக சேதன விவசாய தொழில் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 470 க்கும் மேற்பட்ட பங்குதாரர்களுக்கு கண்டி, குருணாகல், மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் நான்கு (04) செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

சேதனத் துறையுடன் தொடர்புபட்ட கொள்கைரீதியான பிரச்சினைகள், தரங்கள் மற்றும் ஆற்றுப்படுத்துதல் சம்பந்தமான தொழில்நுட்ப விடயங்கள் பற்றிய தீர்மானங்கள் சம்பந்தமாக ஆலோசனைகளை வழங்குவதற்காக தேசிய சேதன கட்டுப்பாட்டு அலகின் மூலம் இரண்டு குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுக்களின் மூலம் சேதனப் பொருட்கள் சார்ந்த உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள நபர்களை நிறுவனங்களை சிறந்த கண்காணிப்பும் வசதிகளை வழங்குவதற்காக அவை அனைத்தையும் தேசிய சேதன கட்டுப்பாட்டு அலகில் பதிவுசெய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளையில், சேதனப் பொருட்கள் சார்ந்த விவசாய கைத்தொழில் உற்பத்திக்காக தனியான இயைபுமுறை குறியீட்டு இலக்கங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கை முறைகள் தொடர்பாக நடாத்தப்பட்ட 4 கற்கைநெறிகள் காக பங்குபற்றிய வர்களின் மொத்த எண்ணிக்கை 162 காணப்பட்ட அதேவேளையில் சர்வதேச செயற்பாட்டு நோக்குகள் பற்றிய 2 கற்கை நெறிகள் 97 நபர்கள் பங்கு கட்டியுள்ளனர்.

சந்தை மற்றும் சந்தை அறிக்கை தொடர்பான இரட்டை ஆராய்ச்சிகள்

பொருளாதார ராஜதந்திர மேம்பாடு தொடர்பான அங்கங்களுக்கு இடையிலான பணிப் படையின் ஒத்துழைப்புடன் குறிப்பான சந்தைகளுக்காக உதாரணமாக செக் குடியரசு ஐக்கிய ராஜ்யம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்காக 3 உற்பத்தி அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இலங்கைக்கான முன்னுரிமை சந்தைகளை அடையாளம் காண்பதற்கும் தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு சாத்தியமான உற்பத்திகளை அடையாளம் காண்பதற்கும் 15 சந்தைகள் இற்றைப்படுத்தப்பட்டன. தாய்லாந்து, இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா, வங்காளதேசம், வியட்நாம், தாய்வான், பிலிப்பைன்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற 10 சந்தைகளுக்காக இரட்டை ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டது. வர்த்தக பேரவைகள், அமைப்புக்கள் மற்றும் பிராந்தியங்கள் போன்றவற்றுக்கு அனுப்பப்பட்டன

மீன்பிடி உற்பத்திகள் வேளாண்மை மற்றும் கடல் தாவரங்கள் வேளாண்மை தெங்கு சார்ந்த இனிப்பு பண்டங்கள் இங்கு சார்ந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் மையநீக்கிய சுத்திகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய், தேங்காய் பால் நீர் மற்றும் பழக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் அரிசியை அடிப்படையாகக்கொண்ட பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் அரிசி பெஸ்டா உற்பத்தி போன்ற விசேட உற்பத்திக்காக 9 மாதிரி கருத்திட்டங்கள் அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள ஏற்றுமதி மற்றும் இணையத்தள வர்த்தகத்திற்கான நிர்மாணத்துறை தொடர்பான 2 சாத்தியவள அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன

இலங்கையின் ஏற்றுமதி துறையுடன் தொடர்புபட்ட விபரமான தகவல்களை உள்ளடக்கிய வெளியீடாக அச்சு மற்றும் இறுவட்டு வடிவில் வெளியிடப்பட்டு தொடர்புடைய நிறுவனங்கள் வர்த்தக பேரவைகள் மற்றும் ஏனைய பங்குதாரர் அமைப்புகள் ஆகியவற்றுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன

11. சனாதிபதி ஏற்றுமதி விருது

22 ஆவது சனாதிபதி ஏற்றுமதி விருது விழா இலங்கையின் அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையின் கீழ் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் திகதியன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பல்வேறு அமைச்சரவை அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் பங்குபற்றினர். சனாதிபதி ஏற்றுமதி விருது என்பது நாட்டின் ஏற்றுமதி முயற்சிகளுக்கு ஏற்றுமதியாளர்களுக்கு தமது பங்களிப்புக்காக வழங்கப்படுகின்ற அதி உன்னத அங்கீகாரமாகும்.

ஏற்றுமதியாளர்கள் 2017 ஆம் ஆண்டில் தமது சிறப்பான செயல்திறனுக்கு மொத்தம் 59 விருதுகள் 11 ஒட்டுமொத்த (சிறப்பு) விருதுகள், 47 துறை விருதுகள் (உயர் அன்னியச் செலாவணி வருவாய்க்கு 38 விருதுகள் மற்றும் வளர்ந்துவரும் ஏற்றுமதியாளருக்கு 9 விருதுகள்) இந்த விழாவில் வழங்கப்பட்டன.

